வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu


24.01.2021 ஞாயிற்றுக்கிழமை







15

அத்தியாவசிய பொருள்களுக்கு நிலையான விலை



10

எதற்கு காதி நீதிமன்றம்?



11

மீள்பரிசீலிக்க கோருகிறது ஐ.நா.



13

வென்றது பங்களாதேஷ்!

# ஏமாற்றுத்தனமானதே ஆணைக்குழு!

## அதை ஐ.நா. நம்பிவிடக்கூடாது என்கிறார் சூக்கா



கொழும்பு, ஜன. 24

“மோசமான சர்வதேசக் குற்றங்கள் ஏதாவது இலங்கையில் புரியப்பட்டனவா என்பதை ஆராய்வதற்கு இன்னுமொரு ஆணைக்குழுவை நியமிக்கப்பட்டவை மிகவும் கேலிக்கூத்தானதாகவும், ஏமாற்றுத்தனமானதாகவும், பாதிக்கப்பட்டவர்களை அவமதிப்பதாகவும் உள்ளது. இந்த ஆணைக்குழுவானது தெளிவற்ற மற்றும் நேரத்தை வீணடிக்கும் ஒன்று மாத்திரமே. அத்துடன் அதற்கு நம்பகத்தன்மை வழங்கப்பட்டால் அது ஐ.நாவின் முழு நடவடிக்கையையுமே பலவீனமாக்கும்.”

- இவ்வாறு தென்னாபிரிக்காவின் இடைநிலை நீதி அதிகாரியும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா தெரிவித்

02

# ஜனாதிபதி ஆணைக்குழுவால் ஜெனிவாவில் எதுவுமே ஆகாது!

## இது முழுக் கேலிக்கூத்து என்கிறார் சுமந்திரன்



கொழும்பு, ஜனவரி 24

“மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டுள்ள மூவர் கொண்ட ஆணைக்குழுவினால் ஜெனிவாவில் அரசாங்கத்திற்கு எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை. இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளப்போவதுமில்லை.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.எ.சுமந்திரன்.

02

## இது ஒரு கண்துடைப்பு



கொழும்பு, ஜன. 24

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ள இந்த ஆணைக்குழு, ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், பிபிசி தமிழிடம் பேசும் போது இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்

02

## ஐ.நாவை சமாளிப்பதற்கு முயற்சி என்கிறார் மனோ



கொழும்பு, ஜன. 24

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு எதிர்வரும் மார்ச் மாதம் கொண்டு வரவுள்ள தீர்மானத்தை சமாளிக்கும் வகையில், கண் துடைப்பிற்காக இந்த ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து பி.பி.சி தமிழுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன்- ஐநா மனித உரிமை ஆணையகத்தை சமாளித்து, மீண்டும் கால அவகாசம் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலேயே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

02

## பீரிஸுக்கு தொற்றில்லை



கொழும்பு, ஜன. 24

கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸுக்கு கொரோனா தொற்றில்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் எவரும் கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவருடன்

02

## ஐ.நாவின் உறுப்பு நாடுகளை திசை திருப்பும் போலி முயற்சி

### ஜனாதிபதியின் மூவரடங்கிய குழு குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

கொழும்பு, ஜன.24

இலங்கையைக் கண்காணிப்பதற்கான புதிய தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றுவது மிகவும் அவசியம் என மனித உரிமைகள் கண்காணிப்

02

## தமிழர் வாழ்வுரிமையை காக்க இன்று அவசர கலந்துரையாடல்

### அனைத்துத் தரப்புகளுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

தமிழ் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்க இன்று ஞாயிற்றுக்கிழமை அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

02

## பொதுசன வாக்கெடுப்பு கோர இதுவே தருணம்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்து

வவுனியா, ஜன.24

தமிழர்களுக்கு பொதுசன வாக்கெடுப்பு தேவை என்று ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுக்குச் சொல்ல இதுவே சிறந்த தருணம் என வவுனியாவில் போராட்டம் முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தத்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## ஏமாற்றுத்தன...

துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

“மனித உரிமை மீறல்கள் உண்மையில் நாட்டில் இடம்பெற்றதை கடந்த கால விசாரணைகள், ஆணைக்குழுக்கள் வெளிப்படுத்தியுள்ளனவா என்பதை ஆறு மாதகாலத்துக்குள் கண்டறிவதற்கு இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச இன்னுமொரு ஆணைக்குழுவை நியமித்துள்ளார்.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அடுத்த மாதம் 30/1 தீர்மானத்தின் கீழ் மீள் இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஈடுபாடுகளை இலங்கை நடைமுறைப்படுத்துவது பற்றிய மீள்பார்வையில் இது எதிபார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் சபையால் 2015 இல் ஆணையிடப்பட்ட ஒரு விசாரணையானது குற்றவியல் குற்றச்சாட்டுக்களை மேற்கொள்வதற்கான ஒரு போதிய தொடக்க நிலை உள்ளதை உறுதி செய்ததுடன் போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவற்றைச் செய்வதில் அரசின் பங்கையும் தெளிவாக எடுத்துக்காட்டியது. இதுவரை விசாரிக்கப்படாத கடுமையான மீறல்கள் மற்றும் குற்றங்கள் புரியப்பட்டதை அரசே குறிப்பாக ஏற்றுக்கொண்டமையால் மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை உள்ளது.

01) மனித உரிமைகள் மீறல்கள் பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட முன்னைய விசாரணை ஆணைக்குழுக்கள், குழுக்கள் ஏதாவது மனித உரிமை மீறல்கள், பாரிய சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் இது போன்ற வேறு ஏதாவது குற்றங்கள் பற்றி வெளிப்படுத்தியுள்ளார்களா என்பதைக் கண்டுபிடித்தல்.

02) பாரிய மனித உரிமை மீறல்கள், பாரிய சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் ஏனைய இது போன்ற குற்றங்கள் தொடர்பில் இங்கு குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் என்ன கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை அடையாளம் காணுதல் மற்றும் இங்கு கூறப்பட்ட தகவல்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி ஏதாவது சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் அடையாளம் காணுதல்.

03) தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் என்ன முறையில் இந்தச் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன? அத்துடன் தற்போதைய அரச கொள்கையின் அடிப்படையில் அந்தச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்?

கடந்த கால ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புக்கள் என்ன என்பதையும் அவை நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்பதையும் புதிய ஆணைக்குழுவை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

OHCHR இனுடைய விசாரணையின் (A/HRC/30.CRP.2) சிபாரிசுகளைக் கொண்ட 4 பக்கங்களை சாதாரணமாக மீள்பார்வை செய்ய வேண்டிய அதேவேளையில் கடந்த கால ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புக்களை அடையாளம் காண்பதற்கு ஒரு ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும் என்பது கேலிக் கூத்தானதாகும்.

நடைமுறைப்படுத்தல் என்பது இதுவரை இடம்பெறவில்லை என்பது போதியளவுக்கு தெளிவாக உள்ளது. அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகள் தமது சொந்த மக்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட்டவற்றுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஈடுபாடு பற்றி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார்கள்.

தீர்மானம் 30ஃ1 மற்றும் அடுத்து வந்த தீர்மானங்களும் இலங்கை அரசின் உடன்பாட்டுடன் பொறுப்புக்கூறல், தேசிய நல்லிணக்கம் மற்றும் குணப்படுத்தலை ஊக்குவிப்பதற்கு இடைகால நீதிக்கான ஒரு விரிவான முழுமையான திட்ட வரைவை உருவாக்கியது.

மீளாய்வு செய்யப்படவேண்டிய மீறல்கள் பற்றிய எந்தக் காலவரையறையும் கொடுக்கப்படாமல் இலங்கையின் இந்தப் புதிய ஆணைக்குழுவின் விதிமுறைகள் தெளிவற்றமுறையில் எழுதப்பட்டுள்ளன.

குற்றங்கள் புரியப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராக முக்கிய பணியாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு மனிதராலேயே நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவானது இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் பற்றிய ஒரு வாசிப்பு குழுவினை விட கொஞ்சம் பரவாயில்லை.

இந்த புதிய ஆணைக்குழுவானது ஒரு நீதிபதியால் தலைமை தாங்கப்படுகின்றது. இந்த நீதிபதி ஐக்கிய நாடுகளில் இலங்கையை தற்காத்துக் கொள்வதில் குறைந்தது 4 சந்தர்ப்பங்களில் கடந்த காலத்தில் அவர் ஆற்றிய பணி தொடர்பில் பல நலன் முரண்பாட்டுப் பிரச்சினைகள் உள்ளன.

ஒரு சந்தர்ப்பத்தில் AHMD நவாஸ் ஜெனிவாவுக்கான இலங்கைத் தூதுக் குழுவில் அங்கம் வகித்தபோது ஜெனிவாவில் ஐ.நா. நிபுணர் குழுவின் தவறான அறிக்கை முன்வைக்கப்படுவதற்கு ஒரு எதிரான நகர்வை மேற்கொள்ளவே இந்த தூதுக்குழு அங்கு சென்றது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் விடயம் பற்றி தனக்கு அறிக்கை தருமாறு இந்த ஐ.நா. குழுவானது பொதுச் செயலாளர் பான் கீ - மூனால் உருவாக்கப்பட்டது.

போர் மற்றும் சமாதானத்தின்போது ஒவ்வொருவரினதும் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச சட்ட ஆட்சி முழுவதும் மீதான ஒரு பாரிய தாக்குதலையே போர் நடாத்தப்பட்ட முறையானது பிரதிபலிப்பதாக அந்தக் குழு முடிவு செய்தது.

இந்தக் குழுவின் அறிக்கையானது இறுதியில் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக்கு வழிவகுத்தது. இந்த விசாரணையானது 30/1 தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கியதுடன் இது தற்போது இலங்கை பற்றிய மீள்பார்வையை இப்போது அவசியமாக்கியுள்ளது.

தான் பகிரங்கமாகவே எதிராக வாதாடிய ஐ நா. அறிக்கைகளை இந்த ஆணைக்குழுவின் தலைவரால் நடுநிலைமையான முறையில் விசாரிக்க முடியாது. இதைவிட அரசைப் பாதுகாக்கும் சட்டத்தரணியாகவும் அத்துடன் வழக்கறிஞராகவும் இரட்டைப் பணியாற்றுவதாக முற்றிலும் விமர்சிக்கப்படும் அவர் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் அங்கம் வகிக்கின்றார்.

இந்தப் புதிய ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட இன்னுமொருவர் ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ. இவர் அண்மைய காலம் வரை அரசியல் மயமாக்கல் பற்றிய அரசியல் மயமான ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்தார். சென்ற அரசின் கீழ் கொண்டவரப்பட்ட அரசியல் மயமாக்கல் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சம்பவங்கள் பற்றிய அவரது அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

அரசியல் மயமாக்கல் பற்றிய ஆணைக் குழுவுக்கு முன்னால் கொண்டுவரப்பட்ட பல சம்பவங்களை அவர் விசாரிப்பார் என்பதால் அது இந்தப் புதிய ஆணைக் குழுவின் உறுப்பினரான பெர்னாண்டோவும் நலன் முரண்பாட்டைக் கொண்டிருப்பார்.

பெர்ணாண்டோ 2004ஆம் ஆண்டு ஜூன் வரை பொலிஸின் தலைவராக இருந்தார் என்பதால் அந்தக் காலப் பகுதியில் பொலிஸ் படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கையில் அவர் பாரபட்சமற்றவராகவும் சுயாதீனமானவராகவும் செயற்படுவது கடினமானதாக இருக்கும்.

இவர் பதவியில் இருந்தபோது விசாரணைகளைத் தலைமை தாங்குவதில் அவர் தோல்வி கண்டது பற்றி கடந்த காலங்களில் இலங்கையிலுள்ள செயற்பாட்டாளர்கள் கேள்விகள் எழுப்பியுள்ளார்கள்.

இந்த ஆணைக்குழுவானது தெளிவற்ற மற்றும் நேரத்தை வீணடிக்கும் ஒன்று மாத்திரமே. அத்துடன் அதற்கு நம்பகத்தன்மை வழங்கப்பட்டால் அது ஐ.நாவின் முழு நடவடிக்கையையுமே பலவீனமாக்கும்” - என்றுள்ளது.

## தமிழர்...

இது தொடர்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாலிங்கம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

மதத்தலைவர்கள்,மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், கற்றறிந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரையும் நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்திற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே அனைவரும் அனுமதிக்கப்படுவார். எனவே முற்கூட்டியே இந்த கருத்தாடலில் கலந்து கொள்பவர்கள் தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கத்தின் 0777729020 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வருகையை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது-என்றுள்ளது.

## பீரிஸ்க்கு...

நெருங்கிய தொடர்பைக் கல்வி அமைச்சர் மேற்கொண்டிருந் தமை தெரியவந்த நிலையில் அவர் சுயதனிமைப்படுத்தப்பட்டார்.

அவருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## பொதுசன...

தருணத்தை நாம் தவறவிட்டால், வேறு சந்தர்ப்பங்கள் கிடைக்காது என்றும் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஜனாதிபதி...

ஜனாதிபதியின் ஆணைக்குழு முழுக் கேலிக்கூத்து என்றும் அவர் விமர்சித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தகால மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயவும், எதிர்வரும் பெப்ரவரி -மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை சமாளிக்கவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட ஆணைக்குழு குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் பாரிய அளவில் நெருக்கடிகளை சந்திக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இலங்கை குறித்த காத்திரமான அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அரசாங்கம் இந்த நெருக்கடிகளைச் சமாளிக்கவே தற்போது மூவர் அடங்கிய ஆணைகுழு ஒன்றை நியமித்துள்ளது. ஆனால் இந்த ஆணைக்குழுவினால் சர்வதேச அழுத்தங்களை சமாளிக்க எதனையுமே செய்ய முடியாது என்பதே உண்மையாகும்.

அத்தோடு, ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேசம் கருத்தில் கொள்ளப்போவதும் இல்லை. இலங்கையில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றுள்ளதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் அரசாங்கம் இதனை ஆராயவோ, உண்மைகளைக் கண்டறியவோ இதுவரை எந்த வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. மாறாக இலங்கையின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் விதத்திலேயே ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், அரசாங்கத்தின் ஒருபக்கச் சார்பை மாத்திரம் வெளிப்படுத்தும் விதத்திலேயே இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் அமைந்திருந்தன. அவ்வாறு இருக்கையில் முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கையை மீண்டும் வலியுறுத்தும் விதத்தில் புதிய ஆணைக்குழு அமைக்கப்பட்டிருப்பது முற்று முழுதாக கேலிக்கூத்தாகும்-என்றார். (அ)

## ஐ.நாவை...

இலங்கைக்கு எதிராக கடும் தொல்லை தரும் சர்வதேச மேகங்கள் சூழ்கின்றமையினாலேயே, இலங்கை ஜனாதிபதி இவ்வாறான ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

உள்நாட்டுக்குள்ளேயே தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய செயற்பாட்டை இந்த அரசாங்கம் முன்னெடுத்திருக்க வேண்டும்.

அதன் மூலமாக இலங்கை சிங்கள பௌத்த நாடு என்ற வரையறைக்கு அப்பால் சென்று, பல்லின, பல்மொழி, பன்மத நாடு என்ற அடிப்படையை இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்குமானால், இத்தகைய கடுமையான சர்வதேச நெருக்கடிகளை சந்திக்கவேண்டிய தேவைப்பாடு இலங்கைக்கு இருந்திருக்காது.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தான் பொறுப்பை ஏற்க வேண்டும்.

அதனால், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த ஆணைக்குழு ஒரு கண்துடைப்பு.

இதற்கு முன்னர் இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கூட, கண்துடைப்பு ஆணைக்குழுக்களாகவே இருந்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில், அவரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, மிகச் சிறந்த, முற்போக்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. அந்த பரிந்துரைகளை கூட அண்ணன் ஜனாதிபதி செயல்படுத்தவில்லை.

இந்நிலையில், இன்று தம்பி ஜனாதிபதியிடம் அதனை எதிர்பார்க்கவே முடியாது. ஆகவே, இது கண்துடைப்பு என்பதே தனது உறுதியான நிலைப்பாடு-என்றார். (அ)

## இது ஒரு...

கம் மனித குலத்திற்கு எதிரான யுத்தக் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்பது, தமிழர்கள், சர்வதேச அமைப்புக்களின் குற்றச்சாட்டு மட்டுமல்ல, ஐநாவின் குற்றச்சாட்டும் அதுவே என அவர் கூறினார்.

இந்த குற்றங்களை இழைத்தவர் என்ற குற்றச்சாட்டு தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய மற்றும் அவரது அரசாங்கத்திலுள்ள முக்கியஸ்தர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான குற்றச்சாட்டுக்களை இழைத்தவர்கள், தங்களே விசாரணைகளை நடத்தி, தங்களை தாங்களே தண்டித்துக்கொள்ளப் போவதில்லை எனவும் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

அதனாலேயே, பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையொன்றை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக நடத்தப்படவேண்டும் என தாம் கோருவதாகவும் அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கம் ஒரு ஆணைக் குழு அல்ல, 10 ஆணைக்குழுக்கள் நியமித்தாலும், அதனை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.இயற்கை நீதிக்கு முரணாக, யுத்தக் குற்றவாளிகளே நீதியாளர்களாக இருந்து விசாரிக்க முடியாது என்றும் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டார். (அ)

## ஐ.நாவின் உறுப்பு...

பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருக்கும் புதிய ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளை திசை திருப்புவதற்கான போலியான முயற்சி என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய முயற்சிகளால், திசை திரும்பி விடக்கூடாது என வலியுறுத்தியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கையைக் கண்காணிப்பதற்கான புதிய தீர்மானம் ஒன்றை மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றுவது மிகவும் அவசியமாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. (அ-எ)

ஈழநாடு
Eelanadu
24.01.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, தை 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## நீதி ஒருபோதும் கிடைக்காது

தற்போதைய இலங்கை ஆட்சியாளர்களின் நிர்வாகத்தின்கீழ், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காதென்று கொழும்பை தளமாகக் கொண்டியங்கிவரும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்திருக்கின்றது. ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் விடுவிக்கப்பட்டிருப்பது, திருகோணமலையில் இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் கொலை வழக்கில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டிருப்பது ஆகியவை பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வாய்ப்பில்லை என்பதை காண்பிப்பதாகவும் குறித்த நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில், இலங்கையின்மீது புதிய பிரேரணை ஒன்றை முன்வைக்குமாறு தமிழர் தரப்புக்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்ற நிலையிலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவ்வாறானதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. ஜெனிவா தொடர்பில் எவ்வாறானதொரு நிலைப்பாட்டை எடுப்பதென்னும் முடிவுக்கு முன்னர் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் விக்கினேஸ்வரன் அணி ஆகியவற்றுடன் குறித்த நிலையம் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தது. குறித்த நிலையத்தின் பணிப்பாளரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் தலைமையிலேயே மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்பில் மேற்குலக ராஜதந்திர சமூகம் மகிழ்ச்சியடையவில்லை. அதேவேளை, அரசாங்கமும் மனித உரிமைகள் விடயத்தில் மேற்குலகுடன் ஒத்துப்போகும் நிலைப்பாட்டை காண்பிக்கவில்லை. 2015இற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எவ்வாறானதொரு நிலைப்பாட்டை காண்பித்ததோ அவ்வாறானதொரு நிலைப்பாட்டையே தற்போதும் பின்பற்ற முயற்சிக்கின்றது. மனித உரிமைகள் விவகாரத்தில் பொறுப்புக் கூறலை முற்றிலுமாக நிராகரிக்கும்போது, அது அழுத்தங்களை கொண்டுவரும் என்பதும் அரசாங்கம் அறியாதல்ல. ஆனாலும், இந்த விடயத்தில் விட்டுக் கொடுப்புகளுக்கு இடமற்ற போக்கொன்றையே தங்களின் கொள்கை நிலைப்பாடாக அரசாங்கம் முன்வைக்க முயற்சிக்கின்றது.

2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்திற்கான தயார்படுத்தல்களில் கொழும்பு மைய அரசுசாரா நிறுவன சிவில் சமூகம் முக்கிய பங்கு வகித்திருந்தது. அதில் பாக்கியசோதி சரவணமுத்துவும் முக்கியமானவர். இலங்கைமீதான புதிய பிரேரணை தொடர்பான கலந்துரையாடல்களில் இணையனுசரணை நாடுகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே இவ்வாறானதோர் அறிக்கை வெளியாகியிருக்கின்றது. தற்போதைய ஆட்சியாளர்கள் இருக்கும் வரையில், இலங்கைக்குள் நீதியை எதிர்பார்ப்பது கடினமான ஒன்று என்பதையே குறித்த அறிக்கை வலியுறுத்திருக்கின்றது. இலங்கையின்மீது புதிய பிரேரணையொன்றை கொண்டுவருவதற்கான அவசியத்தையும் அதேவேளை, சர்வதேச பொறிமுறையொன்றை வலியுறுத்தவேண்டிய அவசியத்தையும் இந்த அறிக்கையின் மூலம் குறித்த நிலையம் சுட்டிக்காட்ட முயல்கின்றது.

ஜெனிவா விவகாரம் அரசாங்கத்தின்மீது உடனடியாக கடும் தாக்கங்களை ஏற்படுத்தாதுவிட்டாலும்கூட, காலப்போக்கில் பல விளைவுகளை ஏற்படுத்தும். அதேவேளை, பொருளாதார ரீதியிலும் அதிக பாதிப்புக்களை நாடு எதிர்கொள்ள நேரிடும். ஒருவேளை, அரசாங்கம் சீனாவின் மூலம் இந்த நிலைமையை சமாளிக்கலாம் என்று எண்ணக்கூடும். ஆனால், சீனாவுடன் அதிகம் நெருங்கிச் செல்வதால் தமிழர்களுக்கு தீங்கு ஏற்படப் போவதில்லை. மாறாக, சிங்கள மக்களுக்கே அதிக பாதிப்பு ஏற்படும். ஏனெனில், சீனா எதனையும் இலவசமாக வழங்காது. ஒவ்வொன்றுக்கும் ஒரு பேரத்தை வைத்திருக்கும். இறுதியில் அந்தப் பேரம் முழு நாட்டையுமே விழுங்கிவிடலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில், கொழும்பு மைய தாராளவாத சிவில் சமூகமும் புத்திஜீவிகளும் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக செயல்படுவதற்கான வாய்ப்புக்களையே தேடிக்கொண்டிருப்பர். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அரசாங்கத்திற்கு எதிராக திருப்புவர். அப்போது, தமிழ் பிரச்னை அவர்களுக்கு கட்டாயம் தேவைப்படும்.

# ஐ. நா. மனித உரிமைப்பேரவையில் சர்வதேச அழுத்தம்!

- அலசுவது இராஜதந்திரி -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் இத்தடவை ஜெனிவாவில் இடம்பெறும்போது சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் இலங்கைமீது அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பலமாக இருப்பதையே அறிய முடிகின்றது. இதேவேளை, ஜெனிவா அழுத்தங்களை எதிர்கொண்டு, இலங்கை சார்பாக புதிய யோசனைகளை முன்வைக்க ஆணைக் குழுவொன்றையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இருந்தபோதிலும், இலங்கை அரசு 2016ஆம் ஆண்டு சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு பல ஆக்கபூர்வமான தீர்மானங்களைக் கொண்டிருந்தபோதிலும் அவற்றை தகுந்த முறையில் அமுலாக்க கடந்த அரசு தவறியிருந்தது. இதுதவிர, இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசு ஐ. நா மனித உரிமைப்பேரவை பிரேரணைகளிலிருந்து விலகியுள்ளதாக அறித்துள்ள நிலையில், ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவை இலங்கை குறித்து பல தீர்க்கமான தீர்மானங்களை முன்வைக்கவும் முன்வந்துள்ளன.

ஜெனிவா மனித உரிமைப்பேரவை கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 19ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

**இலங்கை பற்றிய அறிக்கை**

பெப்ரவரி 24ஆம் திகதி இலங்கை தொடர்பான அறிக்கை ஜெனிவாவில் தாக்கல் செய்யப்படுமென்று ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் தெரிவித்துள்ளார். கூடவே, உறுப்பு நாடுகளும் தமது கருத்துக்களை இலங்கை தொடர்பாக வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே முன்னனைய அரசு ஜெனிவா பிரேரணையை உதாசீனம்செய்த நிலையில் இன்றைய அரசு அப்பிரேரணையில் காணப்படுகின்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல முன்னேற்றகரமான அம்சங்களை வடக்கு-கிழக்கு மக்களையும், சர்வதேச சமூகத்தையும் அவமதிக்கும் விதத்தில் கையாண்டு வருவதையே காணமுடிகிறது. காணாமல் போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, யுத்தக் குற்றங்களை விசாரிப்பதில் இழுத்தடிப்பு, புதிய அரசியலமைப்பை கொண்டுவருதல் போன்ற நடவடிக்கைகளில் தாமதம், நில ஆக்கிரமிப்பு, வடக்கு-கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படாமை போன்றவை ஏற்கனவே காணப்படுகின்ற ஜெனிவா பிரேரணையில் முக்கிய இடம்பிடித்துள்ளன.

**இலங்கையின் ஆணைக்குழு**

இந்நிலையில், இலங்கை அரசு ஜெனிவாவில் தனது யோசனைகளைத் தெரிவிக்க ஆணைக்குழுவொன்றை நியமித்து, தனது தரப்பு நியாயங்களை முன்வைக்கவுள்ளது.

அதேசமயம் தமிழ் தரப்பு வவுனியா குருமண்காட்டில் சில வாரங்களுக்கு முன்னர் தமது தரப்பு யோசனைகளை ஜெனிவாவில் கூட்டாக முன்வைக்கும தீர்மானத்தையும் எடுத்துள்ளன.

சர்வதேச சமூகம், இலங்கை அரசு, மற்றும் தமிழ் தரப்பு ஆகியவை முத்தரப்பாக தமது யோசனைகளை முன்வைக்கவுள்ள நிலையில், ஜெனிவாவில் இத் தடவை புதிய திருப்பங்களை எதிர்பார்க்க முடியுமென்றே கருதலாம்.

இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தத்தில் ஏற்பட்ட விளைவுகள் மனிதாபிமான அடிப்படையிலும், அரசியல் ரீதியாகவும் பல பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக இலங்கை தனது புதிய யோசனைகளை எத்தகைய வடிவத்தில் முன்வைத்தாலும் வடக்கு-கிழக்கு தமிழ் தரப்பைவிட சர்வதேச சமூகத்தையும் திருப்திப்படுத்த வேண்டியதாகவே இருக்கும்.

**சர்வதேச சமூகத்தின் அதிருப்தி**

ஏனெனில், ஏற்கனவே இலங்கை அரசு தற்போதைய ஜெனிவா பிரேரணையை கையாளும் விதம் குறித்து சர்வதேச சமூகம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இலங்கை அரசு புதிய ஆணைக்குழு மூலமாக புதிய யோசனைகளை முன்வைக்கலாம். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளையே முன்னிறுத்தி சர்வதேச சமூகம் தனது நிலைப்பாட்டை முன்வைக்கும். இதுவிடயத்தில் சர்வதேச சமூகம் மிக அவதானமாகவும், உறுதியோடும் இருப்பதையே ஐ. நா மனித உரிமை ஆணையாளர் மிச்சல் பச்லெட்டின் கருத்தும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்தும் எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

இலங்கை அரசு ஜெனிவா மனித உரிமைப் பேரவையிலிருந்து தன்னை விலக்கிக்கொள்ளும் பட்சத்தில் பலதரப்பட்ட சிக்கல்களை சர்வதேச ரீதியாக எதிர்கொள்ளவும் நேரிடும். ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் சர்வதேச ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கை ஒரு நீண்டகால யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்தி அரசியல், பொருளாதார மற்றும் மனிதாபிமான ரீதியிலான பிரச்னைகளில் சிக்குண்டு மீண்டு வர முடியாத நிலையில், ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இத்தடவை சர்வதேச சமூகத்துடனும் முட்டிமோதுகின்ற நிலையை இலங்கை அரசு பெரிதும் தவிர்த்துக்கொள்வதே ஒரு சிறந்த ராஜதந்திர நகர்வாக இருக்கமுடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# சட்டக் கல்லூரி பரீட்சை தகைமைகளில் திருத்தம்

கொழும்பு, ஜன 24

இலங்கை சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தோற்றுவோருக்குரிய அடிப்படைத் தகைமைகள் திருத்தப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, க.பொ.த உயர்தர பரீட்சையில் திறமை சித்திகள் இரண்டும், சாதாரண சித்தி ஒன்றுடன் கூடிய பெறுபேறுகளைப் பெறுவது போதுமான தகுதி என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் தொடக்கம் சட்டக்கல்லூரி அனுமதிக்கு இந்த தகுதி ஏற்றுக்கொள்ளப்படும் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, பல்கலைக்கழக அனுமதிக்காக உயர்தர பரீட்சையில் 3 சாதாரண சித்திகளைப் பெற்றுக் கொள்தல் போதுமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் சட்ட கற்கைநெறியை பூர்த்தி செய்வோருக்கு, விசேட தெரிவுப் பரீட்சை நடத்தப்பட்டதன் பின்னர், இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு பரீட்சைக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதியாண்டு பரீட்சை ஆங்கில மொழியில் மாத்திரம் நடத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.




**மேடம்**
வளர்ச்சி கூடும் நாள். வாழ்க்கைத் தரம் உயர வழிவகைசெய்துகொள்வீர்கள். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சி வெற்றி பெறும்.

**இடபம்**
தேகஆரோக்யத்தில் தெளிவு பிறக்கும் நாள். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள். வாகனங்கள் சம்பந்தப்பட்ட வகையில் திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்**
நட்பு பகையாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய நாள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிம்மம்**
பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும் நாள். வியாபார போட்டிகளை சமாளிப்பீர்கள். பணியாளர் தொல்லை அகலும்.

**கன்னி**
சந்தித்தவர்களால் சந்தோஷம் அதிகரிக்கும் நாள். உத்தியோக மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். திரும்பிச் சென்ற வரன்கள் மீண்டும் வரலாம்.

**துலாம்**
விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருட்சிகம்**
எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும் நாள். தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முனவருவீர்கள்.

**தனுசு**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**மகரம்**
முன்னேற்றம் கூடும் நாள். முக்கியப் புள்ளிகளின் சந்திப்பு உண்டு. ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகதோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக்கொடுக்கும்.

**கும்பம்**
பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும் நாள்.விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்**
மனஉறுதியுடன் செயல்படும் நாள். தொலைதூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறை வேறலாம். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

# ராஜபக்ஷ அரசின் செயலால் 69 இலட்சம் மக்கள் ஏமாற்றம்

## குமார வெல்கம காட்டம்



காழும்பு, ஜன. 24

**நாட்டில் உள்ள தேசிய வளங்கள் ராஜபக்ஷக்களின் குடும்ப சொத்தல்ல. தான்தோன்றித்தனமாக கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசியல் கட்சி பேதங்களை துறந்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

ரொஜபக்ஷ அரசினால் 69 இலட்சம் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் இராணுவ ஆட்சியிலான நிர்வாகம் செயற்படுத்தப்படும் என ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டேன்.

அரச நிர்வாகம் தொடர்பில் புலமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கி இன்று அரச சிவில் சேவைகள் அனைத்தும் இராணுவமயப் படுத்தப்பட்டுள்ளன. 69 இலட்சம் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

அரச சேவையிலும், உயர் அரச பதவிகளிலும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிவில் சேவைகள் குறித்து புலமை பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவ ஆட்சியை கொண்டுள்ள நாடுகளிலும் ஆரம்பத்தில் இவ்வாறான தன்மையே காணப்பட்டது என்பதை நாட்டு மக்கள் தற்போதாவது புரிந்துக் கொள்ள வேண்டும்.

நாட்டில் உள்ள தேசிய வளங்கள் ராஜபக்ஷக்களின் குடும்ப சொத்து அல்ல. கொழும்புத்துறை முகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் அதானி நிறுவனத்தை அந்நாட்டு மக்கள் எதிர்க்கின்ற நிலையில் அரசாங்கம் அந்த நிறுவனத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்க தீர்மானித்துள்ளமை நகைப்புக்குரியது.

நல்லாட்சி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு கொடுக்கும்போது முன்னின்று போராட்டங்களில் ஈடுப்பட்டவர்கள் இன்று இந்தியாவுக்கு அடிபணிந்து கிழக்கு முனையத்தை தாரை வார்க்க முயற்சிக்கிறார்கள்.

49 சதவீத உரிமம் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்று குறிப்பிடுவதை புத்திசாலியான மக்கள் எற்றுக்கொள்ளமாட்டார்கள். தேசிய வளங்கள் ஒரு குடும்பத்தின் சொத்தல்ல-என்றார்.

# உயிரிழந்த கைதிக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 24

காலி சிறைச்சாலையில் உயிரிழந்த கைதிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கைதி திடீர் சுகயீனமான நிலையில், கராப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுபோது உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ஹற்றனில் பாடசாலை மாணவருக்கு தொற்று

கொழும்பு, ஜன. 24

ஹற்றனிலுள்ள பிரபல தமிழ் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயது மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹற்றன் - குடாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர் ஒருவருக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் மெதவெல குறிப்பிட்டார்.

இந்த மாணவர் இறுதியாக கடந்த 20 ஆம் திகதி பாடசாலைக்கு சமூகமளித்துள்ளார். இதனால் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட மாணவருடன் நெருங்கிப் பழகிய 37 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் கூறினார்.

12 ஆசிரியர்களும் மாணவனின் தாயுடன் பழகிய 6 பேரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட மாணவருடன் தொடர்புபட்டுள்ள ஏனைய நபர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் மெதவெல குறிப்பிட்டார்.

# தேசிய மட்ட வேலைத்திட்டம் இல்லாமல் கொரோனாவை கட்டுப்படுத்தமுடியாது

## விசேட வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 24

கோவிட்டை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க தவறி இருக்கின்றது. அத்துடன் இதனைக் கட்டுப்படுத்த விஞ்ஞான ஆய்வுகளுக்கு முக்கியத்தும் கொடுக்காமல், கற்பனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால்தான் கொரோனா பரவும் வேகம் அதிகரித்துள்ளது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் வைரஸ் தொடர்பான விசேட வைத்திய நிபுணருமான ஜீ.வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் தொற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. என்றாலும் அந்த நடவடிக்கை தேசிய மட்டத்திலான நடவடிக்கையாக காண்பதற்கு இல்லை. தேசிய மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்று இருந்தால்தான் அனைவரதும் ஒத்துழைப்பை இதற்கு பெற்றுக்கொள்ளலாம். குறைந்த பட்சம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை இதற்காக இணைத்துக்கொண்டி ருக்க வேண்டும். அவ்வாறு இடம் பெற்றிருப்பதை காணமுடியாமல் இருக்கின்றது.

அதேபோன்று அனைத்து சமூகத்தவர்களையும் இந்த வேலைத்திட்டத்துக்கு இணைத்துக்கொள்ள வேண்டும்.



கற்பனைக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் எமது நாடு பேரழிவுக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றது.

கோவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால், அந்த சடலங்களின் பாகங்கள் நீருடன் கலந்து, அந்த நீரை யாராவது பயன்படுத்தினால் கொரோனா தொற்று ஏற்படும் என்பது கற்பனையான நிலைப்பாடாகும். அவ்வாறு ஒருபோதும் ஏற்படுவதில்லை. விஞ்ஞான ஆய்வு ரீதியில் அது பிழையான கருத்தாகும். இந்த பிரச்னையால் நாட்டில் மிகவும் உணர்வு ரீதியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அடக்கம் செய்ய அனுமதிக்காததால் நாட்டில் ஒரு சமூகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமல்ல கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய விரும்பும் யாருக்கு வேண்டுமானாலும், அதற்கான அனுமதியை வழங்கி, அது தொடர்பான தேவையான சுகாதார வழிகாட்டல்களை தயாரிக்க வேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்-என்றார்.

# அதிகாரம் வந்ததும் தேசப்பற்றாளர்கள் தேசத்துரோகிகள்

## விஜயதாஸ கடும் விசனம்



**கொழும்பு,ஜன.24**
**எதிர்க்கட்சியில் இருக்கும் போது தேசப்பற்றுள்ளவர்களாகச் செயல்படும் அரசியல்வாதிகள் ஆளும்கட்சிக்கு வந்த பிறகு தேசப்பற்றைமறந்து விடுகிறார்கள். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் கிடையாது. இவ்விடயத்தில் அரசாங்கம் சுயாதீனமாகச் செயல்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கும் போது அரசியல் மற்றும் சமூகமட்டத்தில் பல எதிர்ப்புக்கள் காணப்பட்டன. அப்போது ஆளும் தரப்பிலிருந்த தற்போதைய எதிர்க்கட்சியினர் இன்று வெளிப்படுத்தும் தேசப்பற்றினை வெளிப்படுத்தவில்லை. அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை செயல்படுத்தவே ஆதரவு வழங்கினார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கினால் எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகளை நான் பகிரங்கப்படுத்தினேன். நல்லாட்சி அரசாங்கத்தில் முரண்பட்டுக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. தேசிய வளங்கள் தொடர்பில் எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடு ஆளும் கட்சிக்கு வந்த பிறகு மறக்கப்படுகிறது. தற்போதும் இத்தன்மையே நிலவுகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியுள்ளதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயத்தில் அரசாங்கம் சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கலாம். பின்வாங்குவதற்கான எவ்வித நிபந்தனைகளும் இவ்விடயத்தில் கிடையாது- என்றார். (எ)



# இராவணன் கோட்டைக்கு அருகில் சீமெந்துடன் சென்ற கப்பல் விபத்து

திருகோணமலை,ஜன.24

திருகோணமலைக்கு சீமெந்து ஏற்றிச்சென்ற "எம்.வி. இரோஷன்" என்ற கப்பல் இராவணன் கோட்டைக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுக்காலை இடம்பெற்றது.

விபத்தையடுத்து இந்தப் பகுதிக்கு மீட்புப் பணிகளுக்கு இரு கடற்படை கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

# கிழக்கு முனையம் கை விட்டுப்போகாது நானே பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்

கொழும்பு,ஜன.24

இந்தியாவுடன் செய்து கொள்ளும் துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டம் கடனோ, குத்தகை வேலைத் திட்டமோ அல்ல. இது முற்று முழுதாக முதலீடாகும். அரசாங்கம் முன்னெடுக்கும் சகல வேலைத்திட்டத்துக்கும் நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையை நான் நினைத்தால் போல் நிராகரிக்க முடியாது. அவ்வாறு செய்தால் நாம் சீனாவை சார்ந்துள்ளோம் என்ற தவறான நிலைப்பாடு உருவாகும் என ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் தற்போது ஒரு சில நெருக்கடி நிலைமைகள் உருவாகியுள்ளன. துறைமுக அபிவிருத்தி விடயங்களில் தொழில் சங்கங்கள் போராடி வருகின்றனர். இதேபோன்று தான் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான சிக்கல்கள் எழுந்த வேளையில் குழுவொன்றை அமைத்து அந்த ஒப்பந்தத்தின் நன்மை தீமைகளை ஆராயவும் எனக்கு அறிவிக்கவும் வலியுறுத்தினேன். இந்த விடயங்களை ஆராய்ந்த குழுவினர் எம்.சி.சி. ஒப்பந்தம் மோசமானது எனவும் அரசமைப்புக்கு முரணானது எனவும் கூறினர். எனவே இந்த நிலைமைகளை அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தி அவர்கள் முன்வைத்த முறைமைக்கு அமைய நடைமுறைப்படுத்த முடியாது என அறிவித்தோம்.

அவர்களின் ஒப்பந்தத்திலிருந்து நாம் வெளியேறிவிட்டோம். இன்று நாட்டில் எம்.சி.சி. பிரச்னை இல்லை. அதனை நாம் நிறுத்திவிட்டோம். இப்போது அது தொடர்பில் எவரும் எதுவும் பேசுவதில்லை.

அதேபோன்று தற்போது எழுந்துள்ள கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான உடன்படிக்கை, முன்னைய ஆட்சியில் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் இருவருக்கும் முன்பாக அப்போதைய அமைச்சர் சாகல ரத்நாயக்க, இந்தியப் பிரதிநிதிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றுள்ளது. நான் ஆட்சிக்கு வந்ததும் இந்த உடன்படிக்கைகளை செய்ய மாட்டேன் என தூக்கி வீச முடியாது. அவ்வாறு செய்தால் தவறான எண்ணக்கருவொன்று உருவாகும். ராஜபக்ஷக்கள் அனைத்தையும் சீனாவுக்கு கொடுப்பார்கள் எனக் கூறப்படும். இது முறையானதல்ல. நாம் எந்த நாட்டுடனும் தொடர்புபட்டு செயல்படவில்லை- என்றார். (எ)

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே அரசாங்கத்தால் விசாரணைக்குழு

மட்டக்களப்பு,ஜன.24

அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஆணைக் குழு என்பது தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் கண்துடைப்பு நடவடிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

காலத்தை இழுத்தடிக்க, சாட்சியங்களை மறைப்பதற்கு கால நீடிப்பைக் கோருவதற்காகவுமே ஒரு போலித்தனமான முறையில் யுத்தக்குற்றங்களை, மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய அரசாங்கத்தின் செயல்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகளையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு இனத்தை இல்லாமல் செய்வதென்றால் இனத்தை அழிப்பது, இரண்டாவதாக அவர்களுடைய காணிகளைத் திட்டமிட்டு அபகரிப்பது, மூன்றாவதாக அவர்களுடைய கலாசாரச் சின்னங்களை அழித்தொழிப்பது நடைபெறும்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் பேரின மயமாக்கல், பௌத்த மயமாக்கலுக்குரிய வேலைத் திட்டத்தின் கீழான பாதையில் துரிதமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. - என்றார். (எ)

# லைசன்ஸ் புதுப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, ஜன. 24

சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கும் காலத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீடிப்பதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிவரை கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா தொற்று காரணமாக வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்காக திணைக்களத்துக்கு வருகை தருவது குறிப்பிட்ட தொகையினருக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

அதனால் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் நடவடிக்கையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறுகின்றது.

வாகனச் சாரதி அனுமதிப்பத்திம் காலாவதியான சாரதிகள், வாகனங்களைச் செலுத்தும்போது எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக இவ்வாறு காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நாடளாவிய ரீதியில் அபாய வலயங்கள்

கொழும்பு, ஜன. 24

நாட்டில் மேல் மாகாணத்தில் மாத்திரம் நிலைகொண்டிருந்த வைரஸ் பரவலை ஏனைய பகுதிகளுக்கு பரவவிடாமல் எம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இதனால் நாடளாவிய ரீதியில் பல மாகாணங்களிலும் அபாய வலயங்கள் பல உருவாகியுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேல் மாகாணத்தில் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அது குறைவடைந்துள்ளது என்பதற்காக கவனயீனமாக இருக்காமல் தொடர்ந்தும் இந்த நிலைமையை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கடந்த டிசெம்பரில் நாளொன்றுக்கு தொற்றுக்குள்ளானோர் 3 சதவீதமாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது 5 வீதத்தைக் கடந்துள்ளது. இதன் மூலம் நாம் அபாய கட்டத்துக்குள் பிரவேசித்துள்ளோம் என்பது தெளிவாகிறது. எனவே இப்போதாவது உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் பெப்ரவரி மாதத்தின் முதல் பகுதியில் பாரதூரமான அபாய கட்டத்துக்கு செல்ல நேரிடும்.

சுகாதார தரப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு கொவிட் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இரண்டாம் அலையில் மாத்திரம் நூற்றுக்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 40 பேர் சிகிச்சை பெறுகின்றனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்குமானால் எதிர்வரும் நாட்களில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தால் மருத்து சேவையில் பாரிய நெருக்கடி ஏற்படும். எனவே இவை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சிடம் பரிந்துரைகளை கையளித்துள்ளது- என்றார்.



# தமிழக மீனவர்களின் சடலங்கள் நேற்று இந்தியாவிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

இலங்கைக் கடற்படையின ரின் கப்பலுடன் மோதி விபத் துக்குள்ளானதை அடுத்து உயி ரிழந்த 4 இந்திய மீனவர்களின் உடல்கள் அந்நாட்டு அதிகாரி களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து நேற்று முற்பகலில் இந்த உடல்கள் இந்தியக் கட லோரக் காவற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று இலங்கைக் கடற்படை யின் பேச்சாளர் கப்டன் இந் திக்க டி சில்வா தெரிவித்தார்.

கடந்த 18ஆம் திகதி இரவு இலங்கைக் கடற்படையின் அதிவேக ரோந்துக் கப்பலுடன் இந்திய மீனவர்கள் பயணித்த படகு மோதியதில் மூழ்கிய படகில் இருந்து 4 மீனவர்களது உடல்களும் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

## கொழும்புத் துறைமுக விவகாரம்:

# ராஜபக்ஷ அரசின் குற்றச்சாட்டுகளை அடியோடு நிராகரிக்கின்றார் ரணில்!



கொழும்பு, ஜன. 24

**"கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கோ அல்லது ஜப்பானுக்கோ விற்பது குறித்து நல்லாட்சி அரசில் எந்தவித உடன்படிக்கையும் மேற்கொள்ளவில்லை."**

**- இவ்வாறு முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவி ருத்தி செய்யும் உடன்படிக்கை கள் மாத்திரமே தமது ஆட்சி யில் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் அபிவிருத்தி செய்யப்படும் நேரத்தில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் குறுகிய கால குத்தகைக்கு முனையத்தை இயக்கும். மாறாக நிரந்தரமாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை.

அதேபோல் கடந்த ஆட்சியில் அமைச்சரவையில் இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டதுடன் 51 வீத உரிமம் இலங்கைக்கு இருக்கும் விதமாகவே குத்தகை தொடர்பான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இந்தியாவின் அதானி நிறுவனம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடும் ஜப்பானின் 'ஜெய்கா' நிறுவனம் 190 மில்லியன் அமெரிக்க டொலர்களும் முதலீடு செய்தே இந்த அபிவிருத்தியின் முதற்கட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவிருந்தோம்.

இவ்வாறான நிலைமையில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பதற்கு எமது அரசு இணங்கியதாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை அடியோடு நிராகரிக்கின்றோம் - என்றார்.

# சுயதனிமைப்படுத்தப்பட்ட மணமகளுக்கு திருமணம் நடத்தி வைத்த சுகாதாரத்துறை

## பருத்தித்துறையில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 24

வீட்டில் சுயதனிமைப்படுத் தப்பட்டிருந்த மணப் பெண் ணுக்கு நேற்று குறிக்கப்பட்டி ருந்த சுபவேளையில் திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் வழி காட்டலின் கீழ் பொதுச் சுகா தாரப் பரிசோதகர், பொலிஸார் இணைந்து ஆலய முன்றலில் வைத்து சுகாதார நடைமுறை களின் சமயாசாரப்படி திருமண நிகழ்வு நடத்தப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட் பட்ட பகுதியில் அண்மையில் கோரோனா வைரஸ் தொற்றா ளர் அடையாளம் காணப்பட் டார். அவருடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் வீடு களில் சுயதனிமைப்படுத்தப் பட்டனர்.

சுயதனிமை படுத்தப்பட்ட வர்களில் பெண் ஒருவருக்கு நேற்று திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டிருந்தது. அதனை முன்னிட்டு மணமகனின் குடும்பத்தால் கடந்த சில தினங் களுக்கு முன்பு பொன் உருக்கு வைபவமும் நடத்தி முடிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய திருமண நிகழ்வு தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதக ருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் வழி காட்டலின் கீழ் நீதிமன்றுக்கு முன்பாக உள்ள ஆலய முன் றலில் மணமக்களுடன் நெருங் கிய உறவினர்கள் ஐந்து பேரின் பங்கேற்புடன் திருமண நிகழ்வு நடத்த நேற்று அனுமதியளிக் கப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொலிஸாரின் கண்காணிப்பின் கீழ் சிவாச்சாரி யார் ஒருவரால் இந்த திருமண நிகழ்வு நேற்று முற்பகல் இந்து சமய முறைப்படி நடத்திவைக் கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதுமணத்தம்பதி சுயதனிமைப் படுத்தப்படனர். அவர்களிடம் எதிர்வரும் 28ஆம் திகதி பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக் கப்படும் என்று சுகாதார மருத்துவ அதிகாரியால் அறிவு றுத்தப்பட்டது.

# தாயின் கை தவறியமையால் பறிபோன குழந்தையின் உயிர்

கொழும்பு, ஜன. 24

மொரகொட, மஹதிவுல் வெவ பகுதியில் டிராக்டர் ஒன் றில் சிக்கி குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த டிராக்டரின் பின் னால் தாயும் குழந்தையும் அமர்ந்து சென்றுள்ளனர். திடீ ரென தாயின் கை தவறி குழந்த கீழே விழுந்துள்ளது.

இதன்போது டிராக்டரில் சிக்கிய குழந்தை பலத்த காயங் களுக்கு உள்ளாகி யக்கல வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயி ரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட் டது.

நாமல்புர பகுதியைச் சேர்ந்த 9 மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் டிராக் டரின் சாரதி கைது செய்யப் பட்டுள்ளார்.

# அனுராதபுரத்தில் ஒரு கிராமம் முடக்கப்பட்டது

கொழும்பு, ஜன. 24

அனுராதபுரம் தேவநம்பிய திஸ்ஸ புரத்தில் ஏ 295 கிராம சேசுவர் பிரிவு உடன் அமு லுக்கு வரும் வகையில் தனி மைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக அந்தப் பகுதி முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

(அ)

# அனைத்து இனங்களின் துறைசார் வல்லுநர்களுடன் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்

## சுட்டிக்காட்டுகின்றார் சந்திரகுமார்

கொழும்பு, ஜன. 24

இனங்களுக்கிடையே உருவாக்கப்பட டுள்ள விரிசல்களும் முரண்பாடுகளும் நம்பிக்கையீனங்களும் குறைக்கப்பட்டு ஒற்றுமை கட்டியெழுப்படவேண்டும் எனில் நாட்டில் மேற்கொள்ளப்படும் பொதுவான செயற்பாடுகளில் பன்மைத்துவமும் குறைந்த பட்ச விகிதாசாரப் பிரதிநித்துவமும் கட்டாயமாகப் பின்பற்றப்படல் வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளின் போதும் இனங்களின் பன்மைத்துவ பிரதிநித்துவ பங்களிப்பு அவசியம் பின்பற்றப்படல் வேண்டும். இதுவே இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைப் பலப்படுத்தி, நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

மேற்கொள்ளப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகளின்போது அனைத்து இனங்களின் துறைசார் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்படவேண்டும். அப்போதே சந்தேகங்கள்

நீக்கப்படும். உண்மைத் தன்மை பேணப்படும். இதுவே இனங்களுக் கிடையேயான நல்லுறவை மேலும்




பலப்படுத்தும். தற்போது மேற் கொள்ளப்படும் தொல்லியல் நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே பதற்றத்தையும் சந்தேக

நிலையையும் உருவாக்கியுள்ளன. இதைக் களையவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குண்டு.

எனவேதான் இவ்வாறான ஆய்வு நடவடிக்கைகயின்போது வெளிப்படைத் தன்மையுடன் துறைசார் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் தொல்லியல் ஆய்வுகள் வரலாறுகளை கண்டுபிடிக்கும் நோக்கில் அமையவேண்டுமே தவிர வரலாற்றுப் புனைவு மற்றும் வரலாற்று ஆக்கிரமிப்பு எண்ணங்களுடன் இடம்பெறக்கூடாது என்பதனையும் நாம் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுகின்றோம்-என்றுள்ளது.

(அ)



# உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, ஜன. 24

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

உதயங்க வீரதுங்கவினால் அழைத்து வரப்பட்ட உக்ரைன் சுற்றுலாப்பயணிகள் இலங்கையின் தொல்லியல் சட்டங்கள் மற்றும் தனிமைப்படுத்தல் நடைமுறைகளைப் பின்பற்ற தவறியுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி பொலிஸ்மா அதிபரை கேட்டுள்ளது.

சிகிரியா ஓவியங்களுக்கு முன்பாக படம் எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடத்தில் உதயங்கவும், உக்ரைன் சுற்றுலாப் பயணிளும் படம் எடுத்து இணையத்தில் பகிர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தரம் 6 மாணவர்கள் அனுமதி நடைமுறையில் மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 24

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களை தேசியப் பாடசாலைகளில் தரம் 6 இல் அனுமதிக்கும் நடைமுறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். மாணவர்களுக்கு எந்த அநீதியும் செய்யப்படாது. பாடசாலைகளில் உள்ள வகுப்புகளின் எண்ணிக்கையையோ அல்லது ஒரு வகுப்பில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையோ குறைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அனைத்து தகவல்களையும் அமைச்சின் வலைத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பெப்ரவரி 15 முதல் ஒரு மாத காலத்திற்குள் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார்.

# இந்திய மீனவர் விவகாரத்தை ஆராய மூவர் அடங்கிய குழு

கொழும்பு, ஜன. 24

இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உயரதிகாரிகளைக் கொண்ட இந்த சிரேஷ்ட குழு கடற்றொழில் அமைச்சு, திணைக்களங்களின் அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கடலோர காவற்படை ஆகியவற்றுடன் கலந்துரையாடி இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கான பரிந்துரைகளை கடற்றொழில் அமைச்சருக்கு வழங்கவுள்ளது.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோதச் செயற்பாடுகளினால் இலங்கை கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வதுடன் இலங்கையின் கடல் வளமும் அழிவடைந்து வருகின்றது.

இதனால், குறித்த சட்ட விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கைக் கடற்றொழிலாளர்களினால் தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இலங்கை கடற்பரப்பினுள் நுழையும் இந்தியக் கடற்றொழிலாளர்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஏற்பட்ட துரதிஸ்ட சம்பவத்தின் காரணமாக நான்கு இந்தியக் கடற்றொழிலாளர்கள் உயிரிழந்த சோகம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான சூழலில், எல்லை தாண்டிய செயற்பாடுகளை நிரந்தரமாக நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி கோட்டாபயவின் 2 கதாபாத்திரங்களும் ‘பெயில்’

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது



கொழும்பு, ஜன. 24

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டு கதாபாத்திரங்களுமே ‘பெயில்’ என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.**

தனக்கு இரு முகங்கள் இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். அவரின் இந்த இரு கதாபாத்திரங்களையும் அடையாளம் காண்பது தற்போது பெரும் பிரச்னையாக மாறியுள்ளது. நல்ல பக்கம் எது, கெட்ட பக்கம் எது என்பது தெரியாமல் உள்ளது. என்னை பொறுத்தவரையில் இரு காதபாத்திரங்களுமே பெயில் என்றுதான் கூறுவேன்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பில் ஒரு கார்ட்டூனைக் கூட வரையும் சுதந்திரம் இருக்கவில்லை. அரசாங்கத்தை விமர்சித்த சில ஊடகவியலாளர்களுக்கு இவ்வுலகைவிட்டே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால்தான் 2015 இல் அவர்களுக்கு வீட்டுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போதும் எதிரணியை மிரட்டி, அச்சுறுத்தல்விடுத்து - மௌனிக்க வைத்து பழைய யுகத்துக்கு செல்வதற்கு முயற்சிக்கின்றனர்-என்றார்.

அதேவேளை, ஜனாதிபதியின் அறிவிப்பை திரிவுப்படுத்தி எதிரணி உறுப்பினர்கள் கருத்து வெளியிடுவதாக ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தயாப்பா பண்டார தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய நான்கு பேர் சிக்கினர்

கொழும்பு, ஜன. 24

சாலிய வாவி-நீலபம்ப பகுதியில் புதையலொன்றை அகழ்வதற்கு முயற்சித்த 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களில் பிக்குவாக நடித்துள்ள ஒரு சந்தேக நபரும் உள்ளார் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

# 474 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்புன் ஜன. 24

கடந்த 24 மணித்தியாலங்களில் 474 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

டுபாயிலிருந்து 72 பேரும், அபுதாபியிலிருந்து 30 பேரும், சிங்கப்பூரிலிருந்து 22 பேரும் மற்றும் டோஹா கட்டாரிலிருந்து 103 பேரும் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கு புதிய ஏற்பாடுகளை தயாரிக்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 24

அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான பாராளுமன்றச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான விதிமுறைகள் இல்லாமையால் புதிய விதிகளை தயாரிக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த ஏற்பாடுகளை வர்த்தமானி மூலம் பிரசுரிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மன்னார் மக்களே அவதானம்!

மன்னார், ஜன. 24

மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது கொரோனா மரணம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதிவாகியுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேலும் 23 பேர் புதிதாக கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிலாபத்துறை பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த நபருக்கு, சடுதியாக நோய் நிலை அதிகரித்து, மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பின் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் மன்னார் மாவட்டத்தில் 2 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. மேலும், இவர்கள் இருவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை விடுதி 2 இல் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வந்தபோது, அங்கு இருந்த நோயாளியுடன் தொடர்புபட்ட நிலையில் தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும் என நம்புகின்றோம்.

அத்தோடு, ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 140 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது மன்னார் மாவட்டத்தில் தொற்றின் நிலை அதிகரித்து காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. எனவே, மக்கள் அவதானத்தோடு, பொறுப்போடும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும்-என்றார்.

# சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 24

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகுபவர்களின் தொகை குறைந்து வருகிறது. நேற்று காலை 6 மணி வரை 8 தொற்றாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது. நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற் குள் 8 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்த விளக்கமறியல் கைதிகளாவர்.

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட 5 அதிகாரிகள் உட்பட 139 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களில் 129 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 4228 பேர் குணமடைந்துள்ளனர். 8 பேர் மாத்திரமே கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலைகளில் 4377 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

134 சிறைச்சாலை அதிகாரிகள், 487 ஆண் கைதிகள் , 11 பெண் கைதிகள் , 3511 ஆண் விளக்கமறியல் கைதிகள் , 234 பெண் விளக்கமறியல் கைதிகளுமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 886 பேரும் , மெகசின் சிறைச்சாலையில் 868 பேரும் , மஹர சிறைச்சாலையில் 814 பேரும் , கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 434 பேரும் மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 363 பேருமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்-என்றார்.



# ஆஸியை மிரட்டும் கூகுள்!

தனது தேடு பொறி சேவையை அவுஸ்திரேலியாவில் இருந்து நீக்கப் போவதாக அச்சுறுத்தியுள்ளது கூகுள் நிறுவனம்.

செய்தி நிறுவனங்களுடன் றோயல்டி என்றழைக்கப்படும் ஆதாய உரிமைகளை, கூகுள் நிறுவனம் பகிர்ந்து கொள்வதற்கு அவுஸ்திரேலிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக, இப்படி ஒரு மிரட் டலை விடுத்திருக்கிறது கூகுள் நிறுவனம்.

ஊடக நிறுவனங்களின் செய்திகளை கூகுள்,பேஸ்புக் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு பணத்தைச் செலுத்தும் விதத்தில் அவுஸ்திரேலியா ஒரு புதிய சட்டத்தை அறிமுகப் படுத்தியிருக்கிறது.

ஆனால் அதற்கு அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்களோ கடுமையாக தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றன. இந்த சட்டம் கடினமானது எனவும், இது உள்ளூரில் மக்கள் தங்கள் சேவைகளைப் பயன்படுத்துவதை பாதிக்கும் எனவும் வாதிட்டிருக்கின்றன தொழில் நுட்ப நிறுவனங்கள். அச்சுறுத்தலுக்கு நாங்கள் அடிபணியமாட்டோம் என அவுஸ்திரேலியாவின் பிரதமர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார்.

ஒருவேளை, இந்தச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், செய்திகளின் மதிப்பைத் தீர்மானிக்க கூகுள் மற்றும் பேஸ்புக் போன்ற நிறுவனங்கள் ஊடக நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இந்தச் சட்டம் ஏற்பாடு செய்யும்.

"இந்தச் சட்டங்களில் வேலை செய்ய முடியாது" எனக் கடந்த வெள்ளிக் கிழமை செனட் விசாரணைக் கூட்டத்தில் கூகுள் அவுஸ்திரேலியாவின் நிர்வாக இயக்குநர் மெல் சில்வா கூறினார்.

மேலும் "இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால், கூகுள் தேடுதல் சேவையை அவுஸ்திரேலியாவில் நிறுத்துவதை தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை," எனக் தெரிவித்தார். தன் அரசு பாராளுமன்றம் வழியாக இந்தச் சட்டத்தை, 2021ஆம் ஆண்டில் கொண்டு வருவதில் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய பிரதமர் மொறிசன். தற்போது இந்த சட்டத்துக்கு பெருவாரியாக அரசியல் ரீதியிலான ஆதரவும் இருக்கிறது.

"நான் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அவுஸ்திரேலியாவில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை அவுஸ்திரேலியா வகுக்கிறது. அதை பாராளுமன்றத்தில் செய்துவிட்டோம். அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுச் செயல்பட விரும்புவோர் வரவேற்கப்படுகிறார்கள். ஆனால் நாங்கள் மிரட்டலுக்கு எல்லாம் பதிலளிக்கமாட்டோம்," எனக் கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார் பிரதமர் மொறிசன். அவுஸ்திரேலியாவின் பல்வேறு அரசியல்வாதிகளும் கூகுளின் இந்த அறிவிப்பை ஓர் அச்சுறுத்தல் எனவும், பெரு நிறுவனங்கள் ஜனநாயகத்தை அடக்குவதாகவும் கூறுகிறார்கள்.

**அவுஸ்திரேலியா ஏன் இந்தச் சட்டத்தை கொண்டு வருகிறது?**

அவுஸ்திரேலியாவில் கூகுள் தேடுபொறி அதிகளவில் பயன்படுத்தப்படும் ஒன்று. கூகுள் தேடுபொறியை கிட்டத்தட்ட ஒரு அத்தியாவசிய சேவையாக (near-essential utility) வரையறுத்திருக்கிறது அவுஸ்திரேலிய அரசு. ஆனால் கூகுள் தேடுபொறிக்கு மிகக் குறைந்த அளவிலேயே போட்டி இருக்கிறது.

தொழில்நுட்ப நிறுவனங்கள், செய்திகளைப் படிக்க விரும்பும் மக்கள் மூலம் தங்களுக்கான வாடிக்கையாளர்களைப் பெறுகிறார்கள். எனவே தொழில்நுட்ப பெரு நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊடகத் துறைக்குக் கொடுக்க வேண்டும் என வாதிடுகிறது அவுஸ்திரேலிய அரசு.

ஜனநாயகத்துக்கு வலுவான ஊடகங்கள் தேவை. நிதி நெருக்கடியில் போராடிக் கொண்டிருக்கும் ஊடகங் களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் எனவும் வாதிடுகிறது அவுஸ்திரேலிய அரசு.

அவுஸ்திரேலிய அச்சு ஊடகங்களின் விளம்பர வருவாய், கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து 75 சதவீதம் சரிவைக் கண்டிருப்பதாகக் கூறுகிறது அவுஸ்திரேலியா. சமீபத்தில் பல அவுஸ்திரேலிய செய்தி நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. பல செய்தி நிறுவனங்கள் தங்களின் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கின்றன.

கூகுள் தன்னுடைய முதன்மைச் சேவையான தேடு பொறி சேவையை ரத்துச் செய்வேன் எனக் கூறியது மிகவும் கடுமையானது. தற்போது அவுஸ்திரேலியாவிடம் இதைக் கூறியிருக்கிறது. இதை பல்வேறு உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

இந்த சட்டத்தை கைவிடுமாறு அவுஸ்திரேலியாவிடம், இந்த வாரத் தொடக்கத்தில் அமெரிக் காவின் வர்த்தக பிரதிநிதிகள் கோரியிருக்கிறார்கள்.

**கூகுள் தரப்பு சொல்வதென்ன?**

கூகுள் நிறுவனம் லிங்குகள் மற்றும் தேடுதல் மூலம் கிடைக்கும் முடிவுகளுக்கு பணம் செலுத்த வேண்டுமென்றால், டிஜிற்றல் பொருளாதாரத்துக்கும் தங்கள் வியாபாரங்களுக்கும் ஒத்துவராத முன்னு தாரணத்தை இந்தச் சட்டங்கள் அமைக்கும் என்கிறார் சில்வா.

இணையத்தில் இலவசமாகப் பகிர்ந்து கொள்ளப்படும் விவரங்களுக்கு இது பொருந் தாது அல்லது இணையம் இப்படி செயல்படு வதில்லை என வாதிட்டார் சில்வா.

"நிதிச் சிக்கல் மற்றும் செயல்பாட்டு ஆபத் துக்களுடன், ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து எங்கள் சேவையை வழங்க எங்களால் ஒரு வழியைக் காண முடியவில்லை," என்றார் அவர்.

கடந்த வாரம் தனது ஒரு சதவீத உள்ளூர் பயனர்களுக்கு அவுஸ்திரேலிய செய் தித் தளங்களின் செய்திகள் வரமால் தடுத் ததை கூகுள் உறுதி செய்துள்ளது. அவுஸ் திரேலிய செய்தி சேவைகளின் மதிப்பை சோதிக்கவே இவ்வாறு செய்த தாக கூகுள் தெரிவித்தது.

இந்த சட்டம் முன்னேற்றம் கண்டால், தங்கள் தளத்தில் செய்திகள் பகிரப்படுவது தடுக்கப்படும் என கடந்த ஆண்டே அச்சு றுத்தியது பேஸ்புக்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று, சமூக ஊடக நிறுவனமான பேஸ்புக், மீண்டும் தன் நிலைப்பாட்டை எடுத்துக் கூறியுள்ளது. பேஸ்புக் நிறுவனத்தின் அதிகாரி சைமன் மில்னர் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய செனட் விசாரணையில் "இந்த சட்டங்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை," எனக் குறிப்பிட்டார்.

பேஸ்புக் நிறுவனம் செய்திகளை தன் தளத்தில் வைத்திருப்பதால் வணிக ரீதியாக எந்த நன்மையையும் அடையவில்லை எனக் கூறினார் சைமன்.

கூகுள் மற்றும் பேஸ்புக் ஆகிய தளங்கள் மூலம், செய்தி நிறுவனங்கள் தங்களின் வலைதளங்களை நோக்கி வாசகர்களை இழுத்துக் கொள்ளும் பலனை அடைகிறார்கள் என இரு நிறுவனங்களும் வாதிட்டதும் குறிப்பிடத்தக்கது. **- ஜெய்**

# கொரோனாவின் புதிய திரிபு நோயாளிகளின் உயிரிழப்பு விகிதத்தை அதிகரிக்கலாம்

பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸின் புதிய திரிபு, ஒப்பீட்டளவில் நோயாளிகளின் உயிரை அதிகம் பறிக்கலாம் என தொடக்க நிலை ஆதாரங்கள் கிடைத் திருப்பதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

ஆனால் அதன் தரவுகளில் ஒரு நிலையற்றதன்மை நிலவுகிறது. இந்த கொரோனா வைரஸின் புதிய திரிபுக்கு எதிராகவும் கொரோனா தடுப்பு மருந்துகள் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா வைரஸின் புதிய திரிபு மற்றும் பழைய திரிபுகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் இறப்பு எண்ணிக்கையை பகுப்பாய்வு செய்து கணிதவியலாளர்கள், இந்தத் தரவுகளை திரட்டியுள்ளனர்.

வேகமாக பரவக் கூடிய கொரோனா வைரஸின் புதிய திரிபு, ஏற்கனவே பிரிட்டன் முழுக்க பரவியுள்ளது.

"இந்த புதிய திரிபு (லண்டன் தென் கிழக்கு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட திரிபு) அதிவேகமாக பரவுவதோடு மட்டுமல்லாமல், நோயாளிகளின் பலி எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யலாம் எனவும் சில ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகத் தோன்றுகிறது" என்றார் பிரதமர் ஜோன் சன்.

கொரோனா வைரஸின் இந்த புதிய திரிபு எந்தளவுக்கு ஆபத்தானது, எத்தனை பேரை பலி வாங்குகிறது என்பதைக் கண்டு பிடிக்க, இங்கிலாந்தின் பொது சுகாதார அமைப்பு, இம்பீரியல் கொலிஜ் ஒப் லண்டன், தி லண்டன் ஸ்கூல் ஒப் ஹைஜீன், டிராபிக்கல் மெடிசின், எக்ஸ்டர் பல்கலைக் கழகம் என பல அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மதிப்பீடு செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.



இது தொடர்பான ஆதாரங்களை கொண்டு பிரிட்டனின் நியூ, அண்ட் எமர் ஜிங் ரெஸ்பிரேடரி வைரஸ் த்ரெட்ஸ் அட்வைசரி குரூப் (Nervtag) என்றழைக் கப்படும் அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மதிப்பீடு செய்து வருகிறார்கள்.

கொரோனா வைரஸின் புதிய திரிபு நிறைய நோயாளிகளின் உயிரைப் பறிப்பதாக இருக்க வாய்ப்பு இருக்கிறது, ஆனால் அதை உறுதிப்படுத்த முடியவில்லை என்கி றது இக்குழு.

"இதுவரை கிடைத்திருக்கும் தரவுகள் அத்தனை வலுவாக இல்லை" என பிரிட்டன் அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரான சர் பேட்ரிக் வலன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த திரிபு தொடர்பான தரவுகளைச் சுற்றி நிறைய நிலையற்றதன்மை நிலவுவதை நான் அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த திரிபு தொடர்பாக சரியான தரவுகளைப் பெற நாம் இன்னும் நிறைய உழைக்க வேண்டும். இந்த திரிபு வேகமாக பரவக் கூடியதாக இருப்பதோடு, நோயாளி களின் உயிரிழக்கும் விகிதத்தை அதிகரிப்பது கவலையளிக்கும் விடயம் தான்" என்றார் வலன்ஸ்.

(மறு பக்கம் பார்க்க)

# ஓர் அதிபர் ஒரு 'மனிதர்'!

**நெடுந்தீவு இரா. தர்மலிங்கம்**


சி. வி. ஈ. நவரத்தினசிங்கம்

நெடுந்தீவு மகா வித்தியாலயம் எழுபத்தைந்து ஆண்டுகளை நிறைக்கிறது. இந்த நிறைவில், நினைவில் எழுபவர் ஒரு மனிதர்.

பிறப்பு சம்பவங்களாக இருக்கலாம், ஆனால், இறப்பு வரலாறாக அமைய வேண்டும்' என்றார் அறிஞர் ஒருவர். அது எல்லோருக்கும் அமைந்துவிடு வதில்லை. ஆனால், அதிபர் அமரர் சின்னையா வேதநாயகம் எட்வேட் நவரத்தினசிங்கம், தனது அர்ப்பணித்த சேவையால் நெடுந்தீவு மக்கள் மனதில் என்றும் நீங்காத இடம் பிடித்து, வரலாறு படைத்த நெடுந்தீவு பெற்றெடுக்காத பெருமகனார்.

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, ஆறடியைத் தொட்டுவிட்ட உயரம், எல்லோரையும் இலகுவில் கவர்ந்துவிடும் வசீகர முகம். வெண்மேகம்போன்ற வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை. சட்டையின் கீழ்ப்பகுதி வேட்டிக்குள் மறைந்திருக்கும் சட்டையில் மூன்று தங்கமோ அல்லது தங்க முலாம் பூசப்பட்டதோ தெரியாது, தறிப் பொத்தான்கள். பூணார எலும்புவரை உள்ள கடைசிப் பொத்தான் ஒன்று எப்பொழுதுமே பூட்டப்படாமல் திறந்து இருப்பதை அவதானிக்கலாம். கையில் பிரம்புடன் 'ப' வடிவான கட்டடத் தொகுதியி லுள்ள வகுப்புகளை நோட்டம்போட புறப்படும்போது, அவரின் இந்த மிடுக்கான தோற்றம் புலப்படும். அந்த வேளையில், ஆசிரியர்களின் குரல்களைத் தவிர, அதிபரின் அலுவலக வாசலில் உள்ள பறவைகள் கூட்டில், தங்கள் சிருங்கார குரல்களில் பேசிக்கொண் டிருக்கும் வண்ணவண்ண காதல் பறவைகளின் குரல் ஒலிகளையே அதிகம் கேட்கலாம்.

1946ஆம் ஆண்டு ஸ்தாபக அதிபராக, தென்னை ஓலைக் கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டகைப் பாட சாலைக்கு நியமனம் பெற்றார், பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு சி. வி. ஈ. நவரத்தினசிங்கம். அப்பொழுது, அரசினர் கனிஷ்ட பாடசாலை என்று அழைக்கப் பட்டது. ஆரம்பத்தில் மிகக் குறைந்த மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை, அரசினர் சிரேஷ்ட பாடசாலையாக பரிணாமம் அடைந்து, பின்னர் மகாவித்தியாலயமாக உயர்வு பெற்றது. அதற்கு அவரது தளராத உழைப்பும், விடாமுயற்சியுமே காரணம் என்றால், அது உண்மை தவிர வெறும் புகழ்ச்சியில்லை.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு எட்டு, ஒன்பது ஆண்டுகளில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, அப்போது பிரதம மந்திரியாகவிருந்த சேர். ஜோன் கொத்தலாவலையால் கட்டடம் திறந்துவைக்கப் பட்டமை ஒரு சிறப்பம்சம்.

பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதை அவதானிப்பதில் மிகவும் அக்கறையாக இருந்தார் அதிபர். வரத்தவறும் பிள்ளைகளின் வீட்டிற்கு ஆள் அனுப்பி, பிள்ளைகளின் வரவை உறுதி செய்துகொள் வார். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருவதில் உள்ள கஷ்டம் என்ன என்பதுபற்றி பெற்றோரை அழைப் பித்து, அவர்களுக்கு உள்ள பிரச்னைகளைக் கேட்ட றிந்து, அதற்கான தீர்வுகளையும், புத்திமதிகளையும் சொல்லி அனுப்புவார்.

கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்கள் குறிப்பாக, உயர் வகுப்பு மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட வகுப்புப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக் கென தனியான வகுப்புகளை நடத்தி, அவர்களைப் பரீட்சையில் சித்திபெறச்செய்ய மிகுந்த அக்கறை கொண்டு செயல்படுவார்.

இரவு வேளைகளில் வீடுகளில் படிக்க போதிய வெளிச்சம் இல்லாமை மாணவர்களின் இரவு படிப்பை பின்னடையச் செய்வதை அறிந்த அதிபர், ஆர்வமுள்ள மாணவர்களை பாடசாலைக்கு வரவழைத்து, இரவில் பத்தரை மணிவரையிலும், காலையில் ஆறரைமணி வரையிலும் அங்கு தங்கி படிப்பதற்கு 'பெற்றோமாக்ஸ்' வெளிச்ச வசதி அளித்து, காலையில் அவர்களுக்கு தேநீரும் வழங்கினார்.

உயர் கல்விபெறத் தகுதியுள்ள, ஆனால் வசதி குறைந்த மாணவர்களைத் தனது பொறுப்பில், தனது வீட்டிலேயே அவர்களை வைத்திருந்து உதவியளித்த தில், உயர் படிப்புகளைப் படித்த மாணவர்கள் பலர் உள்ளனர். இவையெல்லாம் அக்காலத்தில் கிடைத் தற்கரிய பேருதவிகளாகும்.

வெண்காயக்கூடுகள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில், வசதி குறைந்த குடும்பங்களின் வறுமையைப் போக்குமுகமாக, பாடசாலை வரும் பிள்ளைகளுக்கு வெண்காயக்கூடு முடையும் பயிற்சியை அளித்ததுடன், அதனைச் சந்தைப்படுத்துவதற்குரிய வாய்ப்புகளையும் அவர் ஏற்பாடு செய்துகொடுத்தார்.

வசதிக்கட்டணம் செலுத்த முடியாது பல மாணவர் கள் இருந்ததைக் கண்டுகொண்ட அதிபர், அவர்களின் வறுமை நிலையைக் கருத்திற்கொண்டு, அவ்வகை மாணவர்களுக்கு வசதிக் கட்டணத்தில் விலக்களித்தார். எல்லா வசதிகளும் இருந்தும், தங்கள் பிள்ளைகளை இந்தியாபோன்ற வெளிநாடுகளுக்கு மேற்படிப்பிற்கு அனுப்ப வகைதெரியாதிருந்த பெற்றோர்களுக்கு அத்தகைய உதவிகளைச் செய்துகொடுத்த பெருந்தன்மைச் செயற்பாடு அவருடையது.

அதிபரின் முயற்சியால் பாடசாலை வளாகத்தில் நடப்பட்ட மரங்கள் இன்றும் சோலையாக காட்சி தருவது, மரநடுகையில் எழுபது ஆண்டுகளுக்கு முன்ன ரேயே தீர்க்கமாய், இயற்கையைப் பேணுவதில் அவர் கொண்டிருந்த அக்கறையை பெருமிதமாய் உணர்த்துகிறது.

வெள்ளிக் கிழமைகளில் சைவ சமய மாணவர்கள் அண்மையிலுள்ள விநாயகர் ஆலயத்துக்கு வழிபாட்டுக் காக செல்வார்கள். இதனால் சிலவேளைகளில் முதலாவது பாடம் தாமதமாகிவிடும் அல்லது நடை பெறாமலேயே போய்விடும். இதைக் கவனத்தில் எடுத்த அதிபர், பாடசாலை வளாகத்திலேயே சைவசமய, கிறிஸ்தவ மத ஆராதனைக்குரிய நிலையங்களை ஏற்படுத்திக் கொடுத்தார். அத்துடன், சைவ சமய மாணவர் கடைப்பிடிக்கும் நவராத்திரி சரஸ்வதி பூசையும், தொடர்ந்து இறுதி நாள் வழிபாட்டுடன் கூடிய கலை நிகழ்ச்சிகளும். அதேபோல் கிறிஸ்தவ பிள்ளைகளின் விழாவாக கிறிஸ்து இராஜா விழா என்று அழைக்கப்பட்ட ஒளி விழா ஆராதனையும், கலை நிகழ்ச்சிகளும் இன்றும் தொடர்கின்றன.

அநேகமான பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கள், வன்னி பெருநிலப்பரப்பில் அக்காலத் தில் குடியேற்ற வாசிகளாகச் சென்றிருந்தார்கள். அவர்களின் பிள்ளைகள் பலர் இங்கு கல்வி கற்பதற்காக உறவினர் வீடுகளில் தங்கியிருப்பார்கள். அறுவடைக் காலம், தை மாத பிற்பகுதியில் அல்லது மாசி மாத முற்பகுதிகளில் வரும். இதை அடிப்படையாகக்கொண்டு, வன்னியில் உள்ள பெற்றோருக்கு உதவி செய்யும் பொருட்டு இரண்டு வாரம் 'அறுவடை விடுமுறை' என்று ஒரு விடுமுறையை அந்தக் காலத்தில் அதிபர் வழங்குவார். இது, அந்தக் வேளையில் பயன் உள்ளதாக பலராலும் வரவேற்கப்பட்டது. 'அறுவடை விடுமுறை', பின்னர் சித்திரை விடுமுறையில் இரண்டு வாரம் குறைக்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் பொதுப்பணி, பொதுத் தொண்டுகள் செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராக இருந்தார். அதற்கு ஊக்கமும் கொடுத்தார். அதற்கு ஏற்ப, ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமைகளில் இரண்டு மணிநேரம் பொது இடங்களான மருத்துவ மனை, கோவில் வீதிகள் போன்ற பல இடங்களில் சிரமதானப்பணி நடைபெறும்.

'பாடசாலை மாணவர்களை, அதிபர் தான் விரும்பிய படி பொது இடங்களுக்கு அழைத்துச் சென்று வேலை களைச் செய்விக்கின்றார். இது அவர்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் செயல்' என்பதுபோன்று, அதிபருக்கெதிராக ஊர்ப் பிரமுகர் சிலரால் கல்வித் திணைக் களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அதிபர் அறிந்து விசாரணையை எதிர் நோக்கியிருந்தார். சில மாதங்களுக்குப் பின் கல்வி அமைச்சிலிருந்து சகல பாடசாலைகளுக்கும் இது விடயமாக ஒரு சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை அதிபரின் தீர்மானத்திற்கு ஏற்றபடி, 'தேசிய சேவை' என்ற பெயரில், சிரமதான பணியில் ஈடுபடுதல் வேண்டும் என்பது அச் சுற்றுநிரு பம் என்பது இங்கு சுட்டிக் காட்டக்கூடியது.

போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த அந்தக் காலத்தில் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இலகுவில் கிடைக்கும் விதமாக பாடசாலையில் தனியானதொரு புத்தக விற்பனை நிலையத்தை அமைந்திருந்தார். (இப்பொழுது உள்ளது போல இலவச பாடப்புத் தகங்கள் அக்காலத்தில் அரசால் வழங்கப்படுவதில்லை.) மாணவர்கள் தமக்குத் தேவைப்படும் அனைத்துப் புத்தகங்கள், கொப்பிகள் எழுது உபகரணங்கள் போன்றவற்றை யாழ்ப்பாணத்து விலையிலேயே அங்கும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

மேலும், மேற்குப் பகுதியிலிருந்து வரும் மாணவர் களில் அதிகமானோர் நான்கு, ஐந்து மைல்கள் தூரம் நடையாகவே பாடசாலைக்கு வந்து சென்றார்கள். இவர்களுக்காக மோட்டார் வாகனம் ஒன்றை ஏற்பாடு செய்து, மாதம் இரண்டு ரூபா கட்டணத்தில் அவர்கள் வந்து செல்ல வசதி செய்தார்.

மாணவர்களின் தேர்ச்சி, சமய அறவு, இல்லங்களின் செயற்பாடு போன்ற பாடசாலை சார்பான செயற்பாடு களுக்கு ஏற்ப வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகலில் மாணவ தேர்ச்சிக் கூட்டம், சமய அறிவுக்கூட்டம், பாடசாலை இல்லக் கூட்டங்களென பலவிதமான மாணவர் அறிவுக்கான கூட்டங்களைப் பாடசாலையில் ஆரம்பித்தார்.

ஆக, இவை அனைத்தும், வாழும் சூழலில், வளரும் ஒரு பிள்ளையின் வளர்ச்சியில், தீர்க்கமான எண்ணம் கொண்ட ஓர் அன்னை - தந்தையின் செயல்பாடுகள்.

இப்போது எழுபத்தைந்து ஆண்டுகளை நெடுந்தீவு மகா வித்தியாலயம் நிறைக்கின்ற வேளையில், இந்த நினைவுகளின் நிறைவுகளும் கூடவே அதனுடன் எப்போதும் நிறைந்திருக்கும்.

# கொரோனாவின் புதிய திரிபு...

கொரோனா வைரஸின் புதிய திரிபு, மற்ற திரிபுகளை விட 30 - 70 சதவீதம் வேகமாகப் பரவுவதாகவும், 30 சதவீதம் கூடுதலாக இறப்பு விகிதங்களை கொண்டிருப்பதாகவும் இதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கூறின.

உதாரணத்துக்கு, 60 வயதுக்கு மேற் பட்டவர்களில் 1,000 பேர் பழைய கொரோனா திரிபால் பாதிக்கப்படுகிறார் கள் என்றால் அதில் 10 பேர் இறப்பார் கள் என எதிர்பார்க்கலாம். ஆனால் கொரோனா வைரஸின் புதிய திரிபு தொற்று ஏற்பட்டால் 13 பேர் மரணிக்க வாய்ப்பிருக்கிறது.

கொரோனா பரிசோதனையில் 'பொசிட்டிவ்' ஆன போது இந்த வேறு பாடு கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் மருத்துவமனை தரவுகளை ஆராய்ந்த போது, இறப்பு விகிதம் அதிகரிக்க வில்லை என்பது கண்டுபிடிக்கப்பட் டது.

இதற்கு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்படுவது மேம்பட்டிருப்பதும், மருத்துவர்கள் கொரோனா நோயாளி களுக்கு சிகிச்சை அளிப்பதில் நிபுணத்து வம் பெற்றுவருவதையும் காட்டுகிறது.

கொரோனா வைரஸின் இந்த புதிய திரிபு கடந்த செப்ரெம்பர் 2020இல் கென்ட் பகுதியில் முதலில் கண்டுபிடிக் கப்பட்டது. இந்த புதிய திரிபுதான் தற்போது இங்கிலாந்து, வடக்கு அயர் லாந்து போன்ற பகுதிகளில் அதிகம் காணப்படு கிறது. இந்த புதிய திரிபு 50-க்கும் மேற் பட்ட நாடுகளுக்குப் பரவியிருக்கிறது.

பைசர் அண்ட் ஒக்ஸ்போர்ட் - ஆஸ்ட் ராசெனீகா தடுப்பூசிகள், பிரிட் டனில் உருவான இந்த புதிய திரிபுக்கு எதிராகவும் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா மற்றும் பிரேசிலில் உருவானதாக கருதப்படும் கொரோனா திரிபுகள், இன்னும் கூடுதலாக கவலையளிப்பதாகக் கூறியுள்ளார் சர் பேட்ரிக்.

"இந்த திரிபுகளில் சில புதிய பாகங்கள் இருக்கின்றன. அதாவது இந்த புதிய ரக திரிபுகள், கொரோனா தடுப்பூசியால் பாதிக் கப்படுவது குறையலாம். இந்த திரிபை நாம் தொடர்ந்து கண்காணித்து ஜாக்கிர தையாக ஆராய வேண்டும்" என்றார்.

பிரிட்டனில் புதிய திரிபுகள் பரவா மல் இருக்க, பிரிட்டனின் எல்லைகளைப் பாது காக்க, அரசு தேவையான நடவடிக் கைகளை எடுக்க தயாராக இருப்பதாக பிரிட்டன் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிபு பிரிட்டனில் பரவிவிடக் கூடாது என்கிற நோக்கில், கடந்த வாரம் பிரிட்டன் அரசு, பல ஆபிரிக்க நாடுகள் மீது பயணத் தடையை விதித்தது.

அனைத்து சர்வதேச பயணிகளும் பிரிட்டனுக்கு வருவதற்கு முன், கொரோனா பரிசோதனை செய்து தொற்று இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். அதோடு பிரிட்ட னுக்குள் வந்த பின் சுய தனிமைப்படுத்து தல் செய்து கொள்ள வேண்டுமெனவும் அரசு குறிப்பிட்டுள்ளது.

# “ஒரு நாடு - ஒரு சட்டம்” எதற்கு காதி நீதிமன்றம்?

## உடன் நீக்க கோருகிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு,ஜன.24

**காதி நீதிமன்றம் நாட்டின் நீதிக்கட்டமைப்புக்குப் பொருத்தமற்றது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிடும் வேளையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் மதத்தை அடிப்படையாகக்கொண்டு சட்டம் செயல்படுத்தப்படுகின்றமை எவ்வகையில் நியாயமாகும்.**

‘ஒரு நாடு - ஒரு சட்டம்” என்ற கொள்கை செயல்படுத்தப்பட வேண்டுமாயின் காதி நீதிமன்றம் நீக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

காதி நீதிமன்றம் நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள வேளையில் காதி நீதிமன்றுக்கான தொழில் நியமனங்களுக்கான வெற்றிடத்துக்கு ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளமை தவறான செயல்பாடாகும்.

காதி நீதிமன்றம், மத்ரஸா பாடசாலை, முஸ்லிம் விவாகச் சட்டம் தொடர்பில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகள் வெறும் தேர்தல் பிரசாரமாகவே காணப்படுகிறது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டவாட்சி கோட்பாட்டுக்கு முரணாக காதி நீதிமன்றம் செயல்படுகிறது. ஒரு இனத்துக்கு மாத்திரம் நீதிமன்றம் செயல்படுவது பொதுச் சட்டம் அவசியமா? என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் வாழும் ஏனைய மக்களும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றங்களை உருவாக்கிக் கொண்டால் பொதுச்சட்டத்துக்கு யார் அடிபணிவது.

காதி நீதிமன்றம், மத்ரஸா பாடசாலை தொடர்பில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இஸ்லாமிய அடிப்படைவாதம் வலுவடைவதற்கான சூழலையே கடந்த அரசாங்கம் ஏற்படுத்தியது. இதன் தாக்கம் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் வெளிப்பட்டது.

நாட்டில் இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கைகள் வேரூன்றும் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம்.

காதி நீதிமன்றம் தொடர்பில் எதிர்வரும் பாராளுமன்றில் உரையாற்றவுள்ளேன். மத்ரஸா பாடசாலைகள் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை அரச தலைவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துவது அவசியமாகும்.

காதி நீதிமன்றத்துக்கு எதிராக முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன.

“ஒரு நாடு - ஒரு சட்டம்” என்ற கொள்கையை செயல்படுத்துவதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே உள்ளது.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்குப் புறம்பாகச் செயல்பட்டால் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலைமையே தற்போதைய அரசாங்கத்துக்கும் ஏற்படும்- என்றார். (எ)





## யாழ். பொலிஸ் நிலைய வருடாந்த வாகன பரிசோதனை நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய வருடாந்த வாகன பரிசோதனை நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற இந்த வாகன பரிசோதனை நிகழ்வில் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணவில கலந்து கொண்டு யாழ். பொலிஸ் நிலைய வாகனங்களைப் பரிசோதித்தார்.

பொலிஸ் திணைக்களத்தால் வருடம்தோறும் பொலிஸ் நிலையங்களில் அணிவகுப்பு, வாகன பரிசோதனைகள் இடம்பெற்றுவரும் நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தின் வாகன பரிசோதனை நிகழ்வு தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடல்களைத் தவிர்த்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது. (எ)

## ஒருபோதும் விடமாட்டேன்!

### *மைத்திரி திட்டவட்டம்*

கொழும்பு,ஜன.24

நான் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வேறொரு நாட்டுக்கு விற்பனை செய்வதை எதிர்க்கின்றோம் என முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வாதுவவில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

எனினும் நான் எந்த வெளிநாட்டு சக்திக்கும் கிழக்கு கொள்கலன் முனையத்தை வழங்குவதில்லை என சபதமெடுத்தேன். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இதேகொள்கையை கொண்டிருந்தது.

இதன்காரணமாக கொழும்புத்துறைமுக கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பான திட்டத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கத்துக்குள் பல பிரச்னைகள் காணப்பட்டன பலர் இதுதொடர்பில் வேண்டுகோள் விடுத்தார்கள் ஆனால் நான் அதனைக் கட்டுப்படுத்திவிட்டேன் - என்றார். (எ)

## போதைப்பொருள் கடத்தல்

## இலங்கையர் இருவர் சென்னையில் கைது

கொழும்பு,ஜன.24

சென்னையில் பல ஆண்டுகளாக தங்கியிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த இலங்கையைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தங்கள் அடையாளத்தை மறைத்து கடவுச்சீட்டு இல்லாமல் பல ஆண்டுகளாக சென்னையில் வசித்து வந்துள்ளனர் என்பது விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. (எ)

## கொரோனாவால் மரணிப்போரின் உடல் அடக்கம்:

# “விசேட வைத்திய குழு அறிக்கையை அரசு உடன் செயல்படுத்த வேண்டும்”

கொழும்பு,ஜன.24

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் எந்தப் பிரச்னையும் இல்லை என்ற விசேட வைத்திய குழுவின் அறிக்கையை அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பிரதான குழுவுக்கு வழங்கியதன் மூலம் எதுவும் ஏற்படப் போவதில்லை. விசேட குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்க்கும் அளவுக்கு பிரதான குழுவில் வைரஸ் தொடர்பான விசேட வைத்தியர்கள் இல்லை என வைரஸ் தொடர்பான விசேட வைத்திய நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால், காலப்போக்கில் அந்த சடலங்கள் மண்ணுடன் கலந்து நீரில் கலப்பதன் மூலம் கொரோனா வைரஸ் பரவலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது.



பொதுவாக வைரஸ்கள் நீரில் பரவக்கூடியதல்ல. அது மனிதனின் மூக்கு மற்றும் வாய் மூலம் சென்று சுவாசக்குழாய் வழியில் பிரச்னையை ஏற்படுத்தக்கூடியது. மாறாக வேறு எங்கும் அது நிலைத்திருப்பதில்லை.

அத்துடன் வைரஸை கட்டுப்படுத்த அனைத்துப் பிரஜைகளும் இதன் பாதிப்பை உணர்ந்து செயல்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் குறிப்பிட்ட வீதத்தினருக்கு தடுப்பூசியை ஏற்றி இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

கொரோனாவால் எமது நாடு உட்பட உலக நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் அதற்கு முகங்கொடுத்து எப்படியாவது இதனைக் கட்டுப்படுத்தவே அனைத்து நாடுகளும் முயற்சித்து வருகின்றன.

ஆனால் எமது நாட்டில் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதா? எரிப்பதா? என்ற தேவையற்ற பிரச்னையை ஏற்படுத்தி ஒரு சமூகத்தின் மத நம்பிக்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் எந்தப் பிரச்னையும் இல்லை என சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட விசேட வைத்தியர்கள் குழு மிகவும் தெளிவான அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சுக்கு கையளித்திருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வருவது தேவையற்ற பிரச்னையையே ஏற்படுத்தும்.- என்றார். (எ)

# இந்திய மீனவர்கள் அத்துமீறல்: வடமாகாணத்தில் கதவடைப்பு



யாழ்ப்பாணம்,ஜன.24

கறுப்புக் கொடிகளை படகுகளில் கட்டியவாறு மீன்பிடிக்க வருவோம் என இந்திய மீனவர்கள் அறிவித்துள்ளமையை கண்டித்து வடக்கு மாகாணம் தழுவிய கதவடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு கோர வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் ந.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

எல்லை தாண்டிய மீன்பிடியில்இந்திய மீனவர்கள்தொடர்ந்து ஈடுபடுவதாலேயே வடகடலில் மீனவர்களுக்கிடையே பிரச்னைகள் ஏற்படுகிறது. வடக்கு மீனவர்கள் மீது பல தாக்குதல்களை இந்திய மீனவர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

எல்லை தாண்டும் மீனவர்களை கடற்படை கைது செய்து வருகிறது. இது வரவேற்கத்தக்கது. கைது நடவடிக்கை தொடர வேண்டும் என்பது எமது தொடர் கோரிக்கையாகும்.

இலங்கைக் கடற்பரப்பில் அண்மைய நாள்களில் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை எமது கடற்பரப்பிற்குள் நுழைய வேண்டாம் என மீண்டும் மீண்டும் கூறுகிறோம்.

சில அசம்பாவிதங்களை வைத்து எமது கடற்பரப்புக்குள் நுழைந்து எமது வளத்தை அழிக்க அனுமதிக்க முடியாது. கறுப்புக் கொடிகளைப் படகில் கட்டிக் கொண்டு மீன்பிடிக்க எமது எல்லைக்குள் வருவோம் என இந்திய மீனவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு அடாவடித்தனமானது. அதனை நாம் அனுமதிக்க முடியாது- என்றார்.(எ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீள்பரிசீலிக்க கோருகிறது ஐ.நா.

கொழும்பு,ஜன.24



**இலங்கையில் குற்றவியல் நீதி அமைப்பு கவனிக்க வேண்டிய பிரச்னைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

குறிப்பாக இலங்கையில் உள்ள குற்றவியல் நீதி அமைப்பு, பயங்கரவாத குற்றச்சாட்டு தொடர்பான விடயத்தை எதிர்கொள்ளும் போது மனித உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆகவே குற்றவியல் நீதி அமைப்பு கவனிக்க வேண்டிய பின்வரும் பிரச்னைகளையும் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் முதலில் சட்டம், பயங்கரவாதத்தின் வரையறை மற்றும் வழக்குகளின் பின்னிணைப்பை நிவர்த்தி செய்வது உள்ளிட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டும்.

பயங்கரவாதத்தைத் தடுக்கும் நோக்கில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கு நியாயமான விசாரணை மற்றும் உரிய செயன்முறையை வழங்க வேண்டும்.

மேலும் பயங்கரவாத குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினரின் மீதும் பாகுபாடு காட்டுவது மற்றும் களங்கம் விளைவிப்பது போன்ற விடயங்களையும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக, பயங்கரவாதச் செயல்பாட்டில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வை வழங்குவதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். (எ)

# அவசரகால பயன்பாட்டுக்கு கோவிஷீல்டுக்கு இலங்கை அனுமதி - இந்தியா வரவேற்பு

கொழும்பு,ஜன.24

இந்தியாவின் கொரோனா தடுப்பூசிக்கு அவசரகால அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியமையைவரவேற்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் மூலம் நேற்று முன்தினம் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தடுப்பூசியை விநியோகிப்பதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டுக்கு எதிர்வரும் மார்ச் மாதமளவில் கொரோனா தடுப்பூசியினை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

## மட்டக்குளியில் மட்டும்

# 9 அருட்தந்தையர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு,ஜன.23

கொழும்பு - மட்டக்குளி பிரதேசத்தில் தேவாலயத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 9 அருட்தந்தையர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தேவாலயத்துக்கு அருகில் மேலும் 50 இற்கும் அதிகமான அருட்தந்தையர்கள் வசிப்பதாக கொழும்பு மாநகர சபை பிரதான சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவான் விஜேமுனி தெரிவித்தார்.

முகக்கவசம் இல்லாமல் சுற்றித்திரிந்த 30 பேரை பிடித்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 4 யாசகர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இருவரும் தொற்றாளர்கள் என இனங்காணப்பட்டனர். இதேவேளை மட்டக்குளி நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட 302 பி.சி.ஆர். பரிசோதனையில் 5 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதேபோன்று மட்டக்குளி பிரதேசத்தில் தேவாலயம் ஒன்றுக்கு அருகில் 9 அருட்தந்தையர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மேலும் 50 இற்கும் அதிகமான சகோதர அருட்தந்தையர்கள் பயின்று வருகின்றனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலைமையால் மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளுக்குச் செல்லும் போது பொதுமக்கள் மேலும் கவனமாக இருக்க வேண்டும்- என்றார்.

(எ)

# ஜெனிவா சவால்களை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய “மெஜிக் ஆடை”

## விசேட குழு குறித்து பிமல் ரத்நாயக்க



கொழும்பு,ஜன.24

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழு, ஜெனிவாவில் அணிந்துகொள்வதற்கான ஒரு ‘மெஜிக் ஆடை” மாத்திரமே என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் மூவரடங்கிய விசேட குழுவொன்றை நியமித்திருக்கின்றார்.

இதனை மேற்கோள்காட்டி தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவொன்றிலேயே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். அப்பதிவில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

‘பேரரசரின் மெஜிக் ஆடைகள்’ என்று தலைப்பிட்டிருக்கும் அவர், ‘உங்களுடைய சட்டமா அதிபர் திணைக்களம் ஒரு கொலைக் குற்றவாளியான பாராளுமன்ற உறுப்பினரை விடுதலை செய்தது. நீங்கள் நீதித்துறையைப் பயமுறுத்துவதற்கு முயற்சிக்கின்றீர்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் பகிரங்கமாகவே அச்சுறுத்தல் விடுக்கின்றீர்கள்.

நீங்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதோடு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களை மீறிச் செயல்படுகின்றீர்கள். நீங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலுவிழக்கச் செய்திருக்கிறீர்கள். அனைத்தையும் நீங்கள் இராணுவ மயப்படுத்தியிருக்கிறீர்கள். இத்தகைய பின்னணியில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உங்களால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழு என்பது ஜெனிவாவில் அணிந்துகொள்வதற்கான ஒரு மெஜிக் ஆடையைப் போன்றதேயாகும்” என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



# ட்ரம்பை பழிவாங்குவோம்!

## ஈரான் அதிஉயர் தலைவர் மிரட்டல்



தெஹ்ரான், ஜன. 24

**ஈரானின் புரட்சிகர ராணுவப்படையின் தலைவர் காசெம் சுலைமானியைக் கொன்றதற்கு, பழிவாங்கும் நடவடிக்கையாக, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக, ஈரானின் அதிஉயர் தலைவர் அலி காமனேயி வெளிப்படையாக இணையத்தில் அழைப்பு விடுத்திருக்கிறார்.**

அலி காமனேயியின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில், ஒரு பெரிய போர் விமானம் அல்லது டிரோனின் நிழலில், டிரம்ப் கோல்ப் விளையாடிக் கொண்டிருப்பது போன்ற ஒரு படம் பகிரப்பட்டிருக்கிறது.

“பழிவாங்கப்படுவது நிச்சயம்” எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த படத்தை முதலில் டுவிட் செய்த மற்றொரு ட்விட்டர் கணக்கை, டுவிட்டர் நிறுவனம் நீக்கியுள்ளது.

@khamenei_site என்கிற டுவிட்டர் கணக்கு போலியானது எனவும், இந்தக் கணக்கு டுவிட்டர் தளத்தின் கொள்கைகளை மீறிவிட்டதாகவும், டுவிட்டர் தரப்பில் இருந்து றொய்ட்டர்ஸ் செய்திச்சேவைக்கு கூறப்பட்டது.

இந்தப் பதிவை, சுமாராக மூன்று லட்சம் பேர் பின்தொடர்பவர்களைக் கொண்ட அயதுல்லா காமனேயியின் பர்ஸி டுவிட்டர் கணக்கிலும் பகிரப்பட்டது. பின்னர் அக்கணக்கில் இருந்தும் அந்த பதிவு நீக்கப்பட்டுவிட்டது.

அந்த டுவிட்டில், பர்ஸி மொழியில் பழிவாங்கல் எனும் சொல் சிவப்பு நிறத்தில் இருந்தது. “சுலைமானியைக் கொன்றவர். இவர் தான் சுலேமானியை தாக்க உத்தரவிட்டார். ட்ரம்ப் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்” என



அப்பதிவில் கூறப்பட்டிருந்தது.

அயதுல்லா காமனேயியின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில், “எப்போது வேண்டுமானாலும் பழிவாங்கப்படும்“ என்று கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி காமனேயி கூறியிருந்த கருத்துடன் இந்தப் படம் பகிரப்பட்டிருந்தது.

டொனால்ட் ட்ரம்புக்கு மட்டும் தடை விதித்துவிட்டு, ஈரானிய தலைவருக்கு தடை விதிக்கவில்லை என குற்றச்சாட்டுகள் எழவே டுவிட்டர் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

முன்னாள் அதிபர் ட்ரம்ப், தன் டுவிட்டர் கணக்கில் அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத் தாக்குதலைத் தூண்டும் விதத்தில் பதிவு செய்ததாகக் கூறி கடந்த மாதம், அவரது டுவிட்டர் கணக்கு முடக்கப்பட்டது.

“இதுபோன்ற அடாவடித்தனமான, மனநிலை சரியில்லாத ஒருவர், முன்னாள் அமெரிக்க அதிபரை கொலை செய்வதற்கு அழைப்பு விடுக்க முடியும். அவர் ஏன் டுவிட்டரில் இருந்து புறக்கணிக்கப்பட வில்லை?” என ஒரு டுவிட்டர் பயனர் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

”ட்ரம்ப் மீது தடை விதிக்கப் பட்டது, ஆனால் இது (ட்ரம்ப் கொலை மிரட்டல்) பதிவு ஏற்றுக்கொள்ளக் கூடியது. இது என்ன நகைச்சுவையா?” என மற்றொரு டுவிட்டர் பயனர் எழுதியுள்ளார்.

ஓராண்டு காலத்துக்கு முன், ஈரானின் தலைநகரான பக்தாத்தில், அந்த நாட்டின் புரட்சிகர ராணுவப்படையின் தளபதி காசெம் சுலைமானி அமெரிக்காவின் டிரோன் தாக்குதல் மூலம் கொலை செய்யப்பட்டார்.

இவர் தலைமையில்தான், ஈரானுக்கு ஆதரவான ராணுவக் குழுக்கள் வளர்ந்தன. இதை முதலாக கொண்டே ஈராக் மற்றும் சிரியாவில் தன் ராணுவ இருப்பை ஈரான் அதிகரித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

“இவர் (காசெம் சுலைமானி) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பல லட்சக் கணக்கான மக்களின் இறப்புக்கு காரணம்” என அப்போது ட்ரம்ப் கூறியது நினைவுகூரத்தக்கது.

(அ)



# அலுவலக மேசையில் பைடன் செய்த மாற்றம்

வொஷிங்டன், ஜன. 24

அமெரிக்க அதிபராக இருந்த போது ட்ரம்ப்பின் அலுவலக மேசையில் சிவப்பு பட்டன் கொண்ட ஒன்றை பொருத்தியிருந்த நிலையில், அதை பைடன் உடனடியாக நீக்கியுள்ளார்.

அமெரிக்காவின் 46ஆவது அதிபராக தெரிவு செய்யப்பட்ட ஜோ பைடன் கடந்த புதன்கிழமை பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்ற கையோடு, பல அதிரடி நடவடிக்கைகளில் அவர் இறங்கியுள்ளார். குறிப்பாக அமெரிக்காவின் அதிபராக ட்ரம்ப் இருந்த போது, கொண்டு வரப்பட்ட பல்வேறு திட்டங்களை இவர் கைவிட்டு வருகிறார்.

அதில் ஒன்று தான், ஓவல் அலுவலக மேசையில் இருக்கும் சிவப்பு பட்டன் கொண்ட பொருள், இது குறித்து அமெரிக்க ஊடகவியலாளர் டாம் நியூட்டன் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அதில், வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் அதிபர் அமரும் பிரம்மாண்டமான ரெசல்யூட் மேசை உள்ளது. பாரம்பரியமான அந்த மேசையில் டிரம்ப் ஒரு சிறிய சிவப்பு பட்டனை பொருத்தியிருந்தார். அதனை தற்போது அதிபர் பைடன் நீக்கி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அது டயட் கோக் பெறுவதற்கான பட்டன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரைம்ஸ் ரேடியோவில் தலைமை அரசியல் விமர்சகராக இருக்கும் டாம் நியூட்டனும், சண்டே ரைம்ஸில் அரசியல் பிரிவு ஆசிரியராக இருக்கும் டிம் ஷிப்மேன் என்பவரும் 2019 -ஆம் ஆண்டு ட்ரம்பை பேட்டி எடுக்கச் சென்றபோது அந்த சிறிய சிவப்பு நிற பட்டனை ஆச்சரியமாக பார்த்துள்ளனர்.

அப்போது ட்ரம்ப் அந்த பட்டனை அழுத்தியுள்ளார். உடனே பணியாள் ஒருவர் வெள்ளி தட்டில் டயட் கோக் கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் ஒரு சோடா பிரியர் ஆவார். தினசரி 12 கேன் டயட் கோக் அருந்துவார் என்று அங்கிருக்கும் உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

மேலும், க்ளிப் சிம்ஸ் என்ற வெள்ளை மாளிகையின் முன்னாள் உதவியாளர், “டீம் ஆப் வைப்பர்ஸ் என்ற சுயசரிதை எழுதியுள்ளார்.

அதில், இந்த சிவப்பு பட்டன் குறித்து அவர் விவரித்துள்ளார்.

இது அணு ஆயுதங்களை இயங்கச் செய்யும் பட்டன் என்று தன்னை பார்க்க வருபவர்களிடம் கூறிவிட்டு உடனே அழுத்திவிடுவார்.

வந்திருக்கும் விருந்தினர்கள் மிரட்சியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பார்கள். அப்போது ஒரு பணியாள் வெள்ளித்தட்டில் டயட் கோக் நிரப்பிய கண்ணாடிக் கோப்பையை கொண்டு வருவார். ட்ரம்ப் வெடித்துச் சிரிப்பார் என குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பல நாட்கள் அந்த சிவப்பு பட்டன் குறித்த உண்மை தகவல் தெரியாமல் இருந்த நிலையில், தற்போது அது தெரியவந்துள்ளது.

# உலக நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகள் அனுப்பும் இந்தியா

புதுடில்லி, ஜன. 24

உலகிலேயே மிகப்பெரிய அளவில் கொரோனா தடுப்பூசி உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கோவிஷீல்ட், கோவேக்சின் தடுப்பூசிகள், சுகாதார முன்கள பணியாளர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

அதே சமயத்தில், மற்ற நாடுகளுக்கும் அந்த தடுப்பூசிகளை அனுப்பி வைக்கும் பணியை கடந்த புதன்கிழமை இந்தியா தொடங்கியது.

அன்றைய தினம், பூட்டானுக்கு ஒன்றரை லட்சம் டோஸ் தடுப்பூசிகளும், மாலைதீவுக்கு 1 லட்சம் தடுப்பூசிகளும் மானிய உதவியாக அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை பங்களாதேஸுக்கும், நேபாளத்துக்கும் மானிய உதவியாக தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

# மெற்றோ உட்பட பயணங்களில் பேசுவதைத் தவிர்க்க அறிவுறுத்தல் இடைவெளி இனிமேல் இரண்டு மீற்றர்

பாரிஸ், ஜன. 24

வேகமாகப் பரவிவரும் புதிய வைரஸுகளிடம் இருந்து தப்புவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகப் பொதுப் போக்குவரத்துகளில் வாயைத் திறக்காமல் - மொபைல் போன்களில் பேசுவதைத் தவிர்த்து - அமைதி காக்குமாறு பயணிகள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

பிரான்ஸின் மருத்துவ அக்கடமி (l'Académie de médecine) விடுத்துள்ள ஒரு வேண்டுகோளிலேயே மெற்றோ ரயில்கள் உட்படப் பொதுப் போக்குவரத்துகளின் போது அதிகம் பேசிக்கொள்வதைக் குறைத்து அமைதி பேணுமாறு அறிவுறுத்தி உள்ளது.

காற்றில் வைரஸ் பரப்பப்படுவதை இயன்றவரை குறைப்பதற்கான இலகுவான பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்று என்று மருத்துவ அக்கடமி தெரிவித்துள்ளது. பயணங்களின் போது மாஸ்குடனோ அதை அகற்றி விட்டோ பேசிக் கொள்வது காற்றில் கிருமி பரவி ஏனையோருக்குத் தொற்றும் வாய்ப்பு மிக அதிகம் என்று சுட்டிக்காட்டப் படுகிறது.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக ஆரம்பம் முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற விதி முறைகளில் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

பொது இடங்கள் உட்பட ஒன்றுக்கு மேற்பட்டோர் கூடும் இடங்களில் ஆட்களுக்கு மத்தியிலான சமூக இடைவெளித்தூரத்தை ஒரு மீற்றரில் இருந்து இரண்டு மீற்றர்களாக அதிகரிக்குமாறு பிரான்ஸின் பொதுச் சுகாதார உயர்அதிகார சபை(Haut Conseil pour la santé publique) பரிந்துரைத் துள்ளது. ஆனால் எல்லா இடங்களிலும் இது சாத்தியமா என்ற விவாதங்கள் எழுந்துள்ளன.

உணவு உண்பதற்கோ அல்லது புகைப்பதற்கோ மாஸ்கை அகற்றும் சந்தர்ப்பங்களில் இரண்டு மீற்றர் சமூக இடைவெளி பேணுவது தொற்றுக்கான வாய்ப்பை குறைக்கும் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது

சாதாரண துணியினால் தைக்கப்படு கின்ற மாஸ்க் வகைகள் உட்பட தரம் இரண்டு (category 2) வகைக்குள் அடங்கும் மாஸ்க் வகைகளுக்குப் பதிலாகத் தரம் ஒன்றினுள் (category 1) அடங்கும் மாஸ்க்குகளை அணிய வேண்டும் என்பதை அதிகார சபை ஏற்கனவே பரிந்துரைத்துள்ளது.

வேகமாகப் பரவிவரும் புதிய வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறும் நோக்குடன் இந்தப் புதிய விதிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பொது இடங்களில் துணியில் தைக்கப்பட்ட மாஸ்க்குகள் அணிவது விரைவில் நிறுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் தொலைக்காட்சி ஒன்றுக்குத் தெரிவித்தார்.



# வென்றது பங்களாதேஷ்!

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 43.4 ஓவர்கள் நிறைவில் 148 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரொவ்மன் பவல் 41 ஓட்டங்களையும் ஜோர்ன் ஓட்லே 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், மொயிடி ஹசன் 4 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர் மற்றும் சகிப் ஹல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஹசன் மொஹமுட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 149 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 33.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டமீம் இக்பால் 50 ஓட்டங்களையும் ஷகிப் ஹல் ஹசன் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அகீல் ஹொசைன், ஜேசன் மொஹமட் மற்றும் ரெய்மோன் ரெய்பர் ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுகளை சாய்த்த பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் மெயிடி ஹசன் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி, எதிர்வரும் 25ஆம் திகதி சட்டோகிராம் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(அ)

# சுப்பர் கிங்ஸில் ரொபின் உத்தப்பா!




விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான ரொபின் உத்தப்பாவை, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வாங்கியுள்ளது.

சென்னை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஷேன் வொட்சன் ஓய்வு பெற்றுவிட்டதால் அந்த இடத்திற்கு அனுபவ வீரர் தேவை என்ற நோக்கில் உத்தப்பாவை சென்னை அணி வாங்கியுள்ளது.

முன்னதாக ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 3 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டு கடந்த ஆண்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடிய ரொபின் உத்தப்பா, பரஸ்பர பரிமாற்றம் அடிப்படையில் சென்னை அணிக்கு மாறுகிறார். இது அவர் விளையாடப் போகும் ஆறாவது அணியாகும்.

கடந்த 2008ஆம் ஆண்டில் இருந்து ஐ.பி.எல். தொடரில் விளையாடிவரும் 35 வயதான உத்தப்பா கடந்த ஐ.பி.எல். தொடரில் 12 போட்டிகளில் வெறும் 196 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய வீரர்களுடன் ஒப்பிடுகையில் ஆஸி. வீரர்கள் மாணவர்களேதான்!



இந்திய அணி வீரர்களோடு ஒப்பிடும்போது, அவுஸ்திரேலியாவின் இளம் வீரர்கள் படிக்கும் மாணவர்களாகத்தான் இருக்கிறார்கள் என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரும், ஆஸி. ஜாம்பவானுமான கிரேக் சப்பல் காட்டமாகக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய அணி ரி-20 தொடரையும், டெஸ்ட் தொடரையும் அபாரமாக வென்று தாயகம் திரும்பியது. அதிலும் அவுஸ்திரேலிய அணியைத் தொடர்ந்து 2ஆவது முறையாக அவர்கள் மண்ணில் வைத்து, பார்டர் கவாஸ்கர் கிண்ணத்தை வென்று இந்திய அணி சாதனை படைத்தது.

இந்திய அணியில் முன்னணி வீரர்களான கப்டன் கோஹ்லி, பும்ரா, உமேஷ் யாதவ், முகமது ஷமி, கே.எல்.ராகுல், அஸ்வின், ஹனுமா விஹாரி ஆகியோர் இல்லாத நிலையில் இளம் வீரர்கள் சாதித்தனர்.

அதிலும் பிரிஸ்பேன் டெஸ்ட்டில் காபா மைதானத்தில் 32 ஆண்டுகளாகத் தோல்வியைச் சந்தித்திராத அவுஸ்திரேலிய அணியை 3 விக்கெட்டில் வீழ்த்தி இந்திய அணி வரலாறு படைத்தது. இந்திய அணியின் டெஸ்ட் தொடர் வெற்றி உலகக் கிரிக்கெட் ரசிகர்களை பிரமிப்படைய வைத்துள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய அணியின் ஜாம்பவானும், இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளருமான கிரேக் சப்பல் அவுஸ்திரேலியாவில் வெளிவரும் சிட்னி மோர்னிங் ஹரால்ட் நாளேட்டில் கட்டுரை எழுதியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

நம்முடைய நாட்டின் இளம் கிரிக்கெட் வீரர்கள் பலவீனமான போர் வீரர்களாகவே இருக்கிறார்கள். இந்திய வீரர்களோடு ஒப்பிடும்போது, நமது இளம் வீரர்கள் 16 வயதுக்குக் கீழ் உள்ள அணியில் விளையாடும் வீரர்களைப் போல், மாணவர்கள்போல்தான் இருக்கிறார்கள்.

இந்திய அணியில் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட அணி அனைத்து வகையிலும் தேர்ந்ததாக உள்ளது. இந்திய அணிக்குள் வந்தாலே கிடைக்கும் வாய்ப்பில் தங்களை நிரூபிக்கவும், அணியை வெற்றி பெற வைக்கவும் முயல்கிறார்கள்.

இரு அணிகளையும் ஒப்பிட்டுப் பேசுவதில் எனக்குச் சிறிது அச்சமாகத்தான் இருக்கிறது. இருப்பினும் ஆஸி. இளம் வீரர்கள் வில் புகோவ்ஸ்கி, கேமரூன் ஆகியோரின் துடுப்பாட்டத்தை இந்திய வீரர்களோடு ஒப்பிடும்போது தொடக்கப் பள்ளி மாணவர்கள் அளவில்தான் இருக்கிறார்கள்.

கடந்த 1960களில் ஓடிய ஹோல்டன் கார்களை வைத்துக்கொண்டு, எலக்ட்ரிக் கார்களை இயக்கும் இந்தக் கால கட்டத்தில் ஓட்ட முடியாது என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய கிரிக்கெட் சபை கோடிக்கணக்கில் வீரர்களை உருவாக்குவதில் செலவிடுகிறது. ஆனால், இந்திய கிரிக்கெட் சபையோடு ஒப்பிடும் போது அவுஸ்திரேலிய சபை உள்நாட்டு கிரிக்கெட் போட்டியான ஷெப்பீல்ட் ஷீல்ட் போட்டிக்கு 4.40 கோடி டொலர்கள்தான் செலவிடு கிறது.

இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் கிரிக்கெட் வீரர்களுக்குச் செலவிடும் தொகைக்கான இடைவெளி வளைகுடா அளவில் இல்லை. அதற்கும் அதிகமாக இந்தியப் பெருங்கடல் அளவுக்கு இடைவெளி இருக்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கு என்ன தேவை என்பதை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை உணராவிட்டால், நம்முடைய ஒட்டுமொத்த கிரிக்கெட் சபையும், வீரர்களைக் கட்டமைப்பதில் முதலீடு செய்யும் மனநிலையை மாற்றாவிட்டால், நாம் தொடர்ந்து போட்டிகளில் தோற்றுக் கொண்டுதான் இருப்போம். இந்திய ஏ அணியின் திறமையோடு நம்முடைய முதல் தர அணியை ஒப்பிடும்போது, நாம் வெட்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

கடினமான போட்டிகளில் விளையாடி, இந்திய அணியினர் நெருக்கடிகளை, அழுத்தங்களைச் சமாளிக்கும் திறமையோடு இருக்கிறார்கள்.

இந்திய ஏ அணியின் ஆட்டத்தைப் பார்க்கும்போது, அவர்களின் விளையாட்டில் உள்ள முதிர்ச்சியும், விளையாட்டின் அனைத்து விதங்களையும் புரிந்துகொள்ளும் விதமும் வியப்பாக இருக்கிறது. இது போன்று செயல்படுவது அரிது.

அடிமட்டத்தில் இருந்து வீரர்களை உருவாக்க இந்தியா செய்துவரும் முதலீட்டின் அளவு கிரிக்கெட் உலகத்தை இனி விழிப்படையச் செய்யும்- என்றார்.

# சாதித்து காட்டிய சிராஜ்



அவுஸ்திரேலிய தொடரில் சிறந்த வேகப் பந்து வீச்சாளராக சாதித்து காட்டினார் சிராஜ்," என, பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித் துள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் முகமது சிராஜ். அவுஸ்திரேலிய தொடரில் பங்கேற்க சென்ற இவருக்கு பல்வேறு சோதனைகள் காத்திருந்தன. இவரது தந்தை திடீரென மரணமடைந்தார். 'கொரோனா' பயணக் கட்டுப்பாடு போன்ற காரணங்கால் இவரால் நாடு திரும்ப முடியவில்லை. மெல்போர்ன் டெஸ்டில் அறிமுகமான இவர், இரு இன்னிங்சிலும் சேர்த்து 5 விக்கெட் சாய்த்தார். சிட்னியில் நடந்த 3ஆவது டெஸ்டில் விளையாடியபோது ஆஸ்திரேலிய ரசிகர்கள் சிலர், இவரை பார்த்து இனவெறியை தூண்டும் வகையில் பேசினர். பிரிஸ்பேனில் நடந்த கடைசி டெஸ்டில் முன்னணி வேகப்பந்துவீச்சாளர்கள் காயத்தால் விலகியதால், வேகக் கூட்டணிக்கு தலைமை ஏற்றார். சிறப்பாக செயல்பட்ட இவர், 2ஆவது இன்னிங்சில் 5 விக்கெட் சாய்த்து வெற்றிக்கு வித்திட்டார். மொத்தம் 13 விக்கெட் வீழ்த்திய இவர், இத்தொடரில் அதிக விக்கெட் கைப்பற்றி இந்திய பவுலர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தார்.

இதுகுறித்து இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி 'டுவிட்டரில்' வெளியிட்ட வாழ்த்து செய்தியில், "அவுஸ்திரேலிய தொடரில் கண்டறியப்பட்ட சிறந்த வேகப்பந்துவீச்சாளர் சிராஜ். தனிப்பட்ட இழப்பு, இனவெறி சர்ச்சை, வேகக்கூட்டணிக்கு தலைமை என, அனைத்து சவால்களையும் சிறப்பாக கையாண்ட இவர், கோப்பை வெல்ல முக்கிய பங்குவகித்தார்," என்றார்.





### இராணுவத்தினர் எனத் தம்மை அடையாளப்படுத்தியோர்

# இந்து ஆலயக்கேணி, அரச மரம் குறித்து விசாரித்ததால் கந்தரோடையில் குழப்பம்

யாழ்ப்பாணம்,ஜன.24

சுன்னாகம் கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோவில் புராதன தீர்த்தக்கேணி, அதனை அண்டியுள்ள அரச மரம் தொடர்பில் இராணுத்தினர் எனத் தம்மை அடையாளப்படுத்தியவர்கள் விசாரித்ததால் அந்தப் பகுதியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஆலயத்துக்கு வந்த சிலர், பூசகரிடம் தம்மை காரைநகர் முகாமைச் சேர்ந்த படையினர் என அறிமுகப்படுத்தினர்.

அந்த ஆலயத்துக்குச் சொந்தமான தீர்த்தக் கேணி, அதனை அண்டியுள்ள அரச மரம் உள்ள நிலப்பகுதி தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

அந்தக் கேணி, அரச மரம் உள்ள நிலப்பகுதி யாருக்குச் சொந்தமானது என அவர்கள், பூசகரிடம் வினவியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூசகரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்கு நேற்றுக் காலை தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடினர்.

கந்தரோடையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்து ஆலயம், அதனைச் சூழவுள்ள பகுதிகள் தொடர்பில் படையினர் எனத் தம்மை அடையாளப்படுத்தியவர்கள் விசாரித்து சென்றமை ஊர் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# பிரதித் தவிசாளர் மீது ஒழுக்காற்று பிரேரணை

### காரைதீவு சபையில் அமைதியின்மை

காரைதீவு,ஜன.24

பிரதித் தவிசாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பிரேரணை கொண்டு வந்தபோது வாதப் பிரதிவாதங்களால் சபை அமர்வு முற்றுப் பெறாமல் இடைநடுவில் குழப்பம் ஏற்பட்டதும் தவிசாளரால் மறு அறிவித்தல் வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது காரைதீவு பிரதேச சபைக்கு வெளியே மாளிகைக்காடு பிரதேசத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றின் பிரதிபலிப்பாக பிரதித் தவிசாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பிரேரணை கொண்டு வந்தபோது வாதப் பிரதி வாதங்கள் முற்றி சலசலப்பில் முடிந்ததால் சபை அமர்வு முற்றுப்பெறாமல் இடைநடுவில் குழப்பம் ஏற்பட்டதும் தவிசாளரால் மறு அறிவித்தல் வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

சுயேச்சைக் குழு பிரதேச சபை உறுப்பினர் சஷி, தனது பிரதேச நீர்ப்பாசன அதிகாரி, கிராம உத்தியோகத்தர், நியாயம் கேட்க வந்த தவிசாளர் போன்றோரை பிரதேச சபை பிரதித் தவிசாளர் ஏ.எம். ஜாஹீர் மாளிகைக்காடு பிரதேசத்தில் வைத்து தரக்குறைவாகப் பேசியதாகவும், தகாத வார்த்தைகளை கொண்டு திட்டியதாகவும் கூறி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கோரி பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்தார்.



இப்பிரேரணை தொடர்பில் உறுப்பினர்களுக்கிடையில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில், பல தடவைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு இறுதியாக வாக்கெடுப்பில் பிரதித் தவிசாளர் அடங்களாக ஆறு உறுப்பினர்கள் பிரதித் தவிசாளருக்கு ஆதரவாகவும் பிரேரணை கொண்டு வந்த உறுப்பினர் சஷி, தவிசாளர் அடங்களாக 04 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

புதிய நியமன முரண்பாட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சபை அமர்விலிருந்து இடையில் வெளிநடப்புச் செய்திருந்த நிலையில், 10 உறுப்பினர்களை மட்டுமே சபையில் இருந்தனர். வாக்கெடுப்பில் திருப்தியில்லை என்ற நிலை உருவானதும் தவிசாளருக்கும் பிரேரணையை எதிர்த்த உறுப்பினர்களுக்குமிடையே கடுமையான கூச்சல் நிலை உருவானதும் சபை அமர்வை மறு அறிவித்தல் வரை ஒத்திவைப்பதற்கு தவிசாளர் அறிவித்து விட்டு சபா மண்டபத்திலிருந்து வெளியேறினார். அதனைத் தொடர்ந்து சபை அமர்வின் நிகழ்ச்சி நிரல்கள் முற்றுப்பெறாமல் நிறைவுக்கு வந்தது. (எ)

# 6 லட்சம் கொரோனா தடுப்பூசி புதனன்று இலங்கை வருகிறது

### ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



கொழும்பு,ஜன.24

**இந்தியாவிலிருந்து 6 இலட்சம் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா கொரோனா தடுப்பூசிகளை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை 6 இலட்சம் டோஸ் கொரோனா தடுப்பூசி இலங்கைக்கு கொண்டுவரப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்ஸ்போர்ட்- அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்குப் பயன்படுத்த இலங்கை அரசாங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது. (எ)

# பருத்தித்துறையில் வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

வடமராட்சி, ஜன.24

பருத்தித்துறை துறைமுக கடற்பரப்பிலிருந்து வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை காலை இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பிரதான வீதி, பருத்தித்துறைச் சேர்ந்த சிவப்பிரகாசம் புனிதவதி (வயது-80) என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் வாசுதேவா, பதில் நீதிபதி நடராஜா ரஜீவன் மற்றும் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா ஆகியோர் சடலத்தை பார்வையிட்டதுடன் மரண விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)



# அத்தியாவசியப் பொருள்களுக்கு பெப்ரவரியில் நிலையான விலை

## வர்த்தக அமைச்சு தெரிவிப்பு




கொழும்பு,ஜன.24

**நேரடி இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் பெப்ரவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தியாவசியப் பொருள்களுக்கான நிலையான விலையைப் பேண ஒப்புக் கொண்டுள்ளனர் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.**

உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் நேரடி இறக்குமதியாளர்களுடன் வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிறுவனமும் தனித் தனியாக மேற்கொள்ளப்படும் செயல் முறைக்குப் பதிலாக, கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு ஒரு குறிப்பிட்ட முறையைப் பயன்படுத்தி விற்பனையாளர்களிடமிருந்து பொருள்களை வாங்குவதற்கான திட்டங்கள் எவ்வாறு செய்யப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் இக்கலந்துரையாடலின் போது விளக்கினார் என்று வர்த்தக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 7 பல்பொருள் அங்காடிகளிலும் வங்கிகளிலும் கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு,

ஏழு பல்பொருள் அங்காடிகளிலும் இரு பிராந்திய வங்கிகளிலும் கொள்ளையில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேகநபர்களை மூன்று ஆயுதங்களுடன் களனிய குற்றவியல் விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடவத்த, ராகமை மற்றும் கந்தானைப் பகுதிகளிலுள்ள ஏழு பல்பொருள் அங்காடிகளிலும் ராகமைவிலுள்ள இரு பிராந்திய வங்கிகளிலும் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பல்பொருள் அங்காடி ஒன்றில் இவர்கள் கொள்ளையிட்டபோது அங்குள்ள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் காயங்களுக்குள்ளானதாகவும் பொலிஸார் கூறினர். (எ)

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 15 பேர் சிக்கினர்

கொழும்பு,ஜன.24

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 2 ஆயிரத்து 725 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 2600 நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது- என்றார். (எ)

# 73ஆவது சுதந்திர தின வைபவத்தில் மாணவர்கள் பங்கேற்பது ஆபத்தானது

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.24

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்ச நிலைக்கு மத்தியில் 73 ஆவது சுதந்திர தின வைபவத்தில் பாடசாலை மாணவர்கள் 300 பேர் பங்கேற்பது ஆபத்தானது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ)




காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 கற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
இரவு
7.30 மணி : சைவசமயம்

# பொடி லெசியின் சகா துப்பாக்கியுடன் கைது

கொழும்பு,ஜன.24

பாதாள குழு உறுப்பினரான பொடி லெசியின் சகா ஒருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிட்டியாகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹரன்னாகல பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையமேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்என பொலிஸ்ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹரன்னாகல பகுதியைச் சேர்ந்த 30 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து வெளிநாட்டு துப்பாக்கி ஒன்றும், தோட்டாக்கள் இரண்டும், உள்நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட் டுள்ளன.

சந்தேக நபர் பாதாள குழு உறுப்பினரான பொடி லெசியின் சகா என்றும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. மிட்டியாகொடை பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கொரோனா தொற்று நிலை கட்டுப்பாட்டை இழக்கவில்லை

## மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.24

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பானது நிலைமை கட்டுப்பாட்டில் இல்லை என்று அர்த்தமல்ல. இதேவேளை

கொரோனா நோயாளிகள் ஒரு கொத்தணிக்கு மட்டுப்படுத்தப்படாமல் நாடளாவிய ரீதியில் பதிவாகி வருகின்றனர் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளைத் தளர்த்தியதைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நிலைமை கட்டுப்பாட்டை இழக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

பொதுமக்கள் தேவையற்ற பயணத்தைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.(எ)

# யாழ்.பல்கலையில் இம்முறை 2500 பேருக்கு பட்டமளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம், 25ஆம் திகதிகளில் கொரோனா தொற்று நிலைமைகளுக்கு ஏற்ப புதிய ஒழுங்குடன் இடம்பெறவுள்ளது.

வழமையாக 1,500 மாணவர்கள் வரையில் தான் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவார்கள். ஆனால் இம்முறை அதற்கு முற்றிலும் மாறாக 2,500 மாணவர்கள் வரையில் பட்டம் பெறவுள்ளனர். கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில் இந்தப் பட்டமளிப்பு விழாவை நடத்தி முடிப்பது மிகவும் சிரமமானது.

எனினும் மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலுக்கு அமையவே புதிய ஒழுங்கு நடைமுறைகளுடன் இந்தப்பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

வழமையாகப் பட்டமளிப்பு விழா இடம்பெறும் கைலாசபதி அரங்கில் இத்தடவை இடம் பெறாது. மாறாக, புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள உள்ளக விளையாட்டரங்கில் தான் 35ஆவது பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கொரோனா தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழமையாக மூன்று நாள்கள் இடம்பெறுகின்ற பட்டமளிப்பு விழா, இம்முறை 02 நாள்களில் நாள் ஒன்றுக்கு 03அமர்வுகள் வீதம் 06 அமர்வுகளில் நடத்தி முடிக்கப்படவுள்ளது.

மேலும் பட்டமளிப்பு விழா மண்டபம் மாற்றப்பட்டுள்

ளமையால், மண்டபத்துக்கான நுழைவாயிலாக மருத்துவப் பீடத்தின் நுழைவாயில் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தனிமைப்படுத்தல் விதிகளை பின்பற்றாத 686 நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

## அஜித் ரோஹண தகவல்



கொழும்பு,ஜன.24

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றாத 686 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தனிமைப் படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் 878 நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில் 795 நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை உரிய முறையில் பின்பற்றுவது உறுதிப் படுத்தப்பட்டது.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறிய 686 அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 10 ஆம் திகதியிலிருந்து மேல் மாகாணத்தில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தனிமைப்படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 6 ஆயிரத்து 919 நிறுவனங்கள் மீது சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 5 ஆயிரத்து 918 நிறுவனங்கள் வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் செயல்பட்டதாகத் தெரியவந்துள்ளது- என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் கொள்கை நிலைப்பாட்டுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும்

## தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை



கொழும்பு,ஜன.24

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் கொள்கைகள் மற்றும் நிலைப்பாடுகளுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும் என்று எதிர் பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.**

இங்கிலாந்தின் தெற்காசிய மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவரத்தன ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் தொலைபேசி வழிக்கலந்துரை யாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது முக்கியமாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நேற்றுத் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர் நீதிமன்ற நீதிபதி நவாஸ் தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசேட ஆணைக்குழு தொடர்பில் தாரிக் அஹமட்டிடம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்களைக் கட்டாய மாகத் தகனம் செய்வதனால் வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட குழுக்கள் மற்றும் நீதி ஆகியவற்றின் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் இக்கலந் துரையாடலின் போது அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் எடுத்துக்கூறியதாக அமைச்சர் தாரிக் அஹமட் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (எ)

# தீவுப் பகுதியில் காணிகளை விடுவிக்க கோரி கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

தீவுப்பகுதியில் கடந்த 30 வருடங்களுக்கு மேல் கடற்படையினர் கைவசப்படுத்தியுள்ள நிலங்களை மீளக் கையளிக்குமாறு கோரி பொதுமக்கள் நாளை திங்கட்கிழமை போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இது குறித்து அந்த மக்கள் தெரிவிக்கையில்-

வேலணை, மண்டைதீவு மற்றும் மண்கும்பான் போன்ற பிரதேசங்களில் சுமார் 30 வருடத்துக்கு மேலாக இலங்கைக் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக்கோரி, நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் பாதிக்கப்பட்ட மக்களின் ஏற்பாட்டில் வேலணை பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவன வீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், மத குருமார்கள், சமுக நலன் விரும்பிகள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்-என்று கோரியுள்ளனர்.

# லைபீரிய வர்த்தகக் கப்பல் கிழக்குக் கடலில் விபத்து



திருமலை, ஜன. 24

திருகோணமலை கடற்பரப்பில் லைபீரிய நாட்டுக்குச் சொந்தமான வர்த்தகக் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபுதாபியில் இருந்து திருகோணமலை துறைமுகத்துக்குச் சிமெந்து கொண்டு வரும் கப்பலே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது எனக் கடற்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

யால சாரணாலயத்தின் இலுக்குபட்டி முனையில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் இந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகியுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் ஆழமில்லா கடற்பரப்புக்கு வந்துள்ளது எனவும், அங்கு கற்பாறையில் மோதியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகளுக்காக இலங்கைக் கடற்படையின் படகுகள் அந்தப் பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் கடற்படை ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# ஹிக்கடுவை சிகிச்சை மையத்தில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி!

கொழும்பு, ஜன. 24

இலங்கை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் ஹிக்கடுவை சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று நண்பகல் உறுதிப்படுத்தியது.

இதேவேளை நேற்று முன் தினம் ஸ்ரீஜயவர்தனபுர மருத்துவமனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இவர் இறுதியாகக் கலந்து கொண்டதோடு சுகாதார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் உட்பட சுகாதார பிரிவின் உயரதிகாரிகள் சிலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# கோட்டாபய, மஹிந்தவால்தான் தேசிய பாதுகாப்பு பலமாகியது



கொழும்பு,ஜன.24

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் கடந்த காலத்தில் மிகவும் சிக்கலான பல சவால்களை வெற்றிகொள்ள முடிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததோடு மாத்திரமன்றி, சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாதச் செயல்பாடுகள் மீண்டும் தலைதூக்க முடியாத வகையில் இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஷ தெரிவித்துள்ளார்.

செத்சிறிபாய மூன்றாவது கட்டடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த அரசாங்கம் எப்.சி.ஐ.டி. என்ற சட்டவிரோத பொலிஸ் பிரிவைப் பயன்படுத்தி அரச ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அவர்கள் பணிபுரிய முடியாத சூழ்நிலையொன்றை உருவாக்கியது.

எனினும் அவர்கள் எவ்வித அச்சமும் சந்தேகமுமின்றி செயல்திறன்மிக்க வகையில் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சூழ்நிலையை நாம் தற்போது ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றோம்.

தற்போது அடிக்கல் நாட்டப்பட்டதைப் போன்று புதிய கட்டடத்தொகுதிகளுக்கான அடிக்கல் நாட்டும்போது சமூகவலைத்தளங்களில் இதுதொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதுவெறுமனே கட்டடமொன்றை நிர்மாணிப்பது மாத்திரமல்ல. அதன் பின்னர் அங்கு பணிபுரியும் அரசசேவையாளர்களுக்கான வசதிகள் உயரும் போது மக்கள் பெறும் சேவையின் தரமும் செயற்திறனும் மேம்படும். அது நாட்டின் பொருளாதாரத்தில் நேர்மறையான விளைவை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் எதிர்கொள்வதற்கு மிகவும் சிக்கலான சவால்களைக்கூட மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் வெற்றிகொள்ள முடிந்தமை தொடர்பில் நாட்டுமக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்ததோடு மாத்திரமன்றி, கடந்த காலத்தில் இடம்பெற்ற சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாதச் செயல்பாடு மீண்டும் தலைதூக்க முடியாத வகையில் இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோன்று போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக்குழுக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் முறியடிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் அச்சமும் சந்தேகமுமின்றி வாழக்கூடிய சூழலொன்றை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார். (எ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15925 \| கோ \|1982<br>மாதகல்\| இந்து \|<br>Technical Officer\|Sri Lanka \|<br>மகம்(சிம்மம்) \| 175செ.மீ | 15997\| கோ \|1983<br>கோப்பாய்\| இந்து\|சூ.செவ் :12<br>நெசவு\| Sri lanka \|<br>சதயம்(கும்பம்) \|162செ.மீ |
| 16153\|வே\|1982<br>மாதகல்\| இந்து \|செவ் : 04<br>Manager\|Australia\|<br>விசாகம் (துலாம்)\|173செ.மீ | 15895\| ப \|1986<br>சாவகச்சேரி\| இந்து \| செவ் :08<br>Searching\|Sri Lanka\|<br>பூரம்(சிம்மம்) 158செ.மீ |
| 16078\| கோ\|1982<br>கொடிகாமம்\|இந்து\|<br>Conductor\| Sri Lanka \|<br>அத்தம்(கன்னி) \|178செ.மீ | 15820\| ந\|1987<br>யாழ்நகரம்\| இந்து \| செவ் :08<br>Accounts Executive\|<br>Sri lanka\|விசாகம்(துலாம்)<br>158செ.மீ |
| 15787\|கு\|1983<br>மயிலிட்டி\| இந்து \|<br>Staff\|France\|<br>திருவாதிரை (மிதுனம்)\|168செ.மீ | 16171\|கு\|1988<br>நவாலி\| இந்து \| Sri Lanka<br>Assistant Commissioner<br>சுவாதி(துலாம்)\| 160செ.மீ |
| 15754\| வே \|1983<br>யாழ்நகரம்\|இந்து\|<br>Software Analyst\| Canada\|<br>ரோகிணி(ரிஷபம்) \|174செ.மீ | 15910\| வே\|1989<br>சுழிபுரம்\| இந்து \| சூ.செவ் :09<br>Teacher\|Sri lanka<br>சித்திரை (துலாம்) \|162செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி. கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. யோன்சன்- ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர்-யாழ் கல்வி வலையம்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : ஹலோ கோடம் பாக்கம்
**இரவு**
7.00 மணி : ஸ்பொட் லைட்-மூத்த
ஊடகவியலாளர் ந.வித்தியாதரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : பதிவு




**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.30 மணி : சைவசமயம்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் சங்கரத்தை நாகபூசணி
அம்மன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்தூர்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.